Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :285 ஆவணி 25 ஆம் நாள் வியாழக்கிழமை 10 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



முச்சந்தி முரளி

"அது நாற வாய் இது வேற வாய் போல பொன்சேகாவுக்கு"

# பிரபாகரனுக்கு நிகர் வேறெவருமில்லை!

## விக்கியை மிரட்டவில்லை தமிழரை மறக்கவில்லை என்கிறார் பொன்சேகா



கொழும்பு, செப்ரெம்பர் 10

'பிரபாகரனுக்கு நிகர் பிரபாகரன்தான். ஆனபடியால்தான் தனி நாட்டை உருவாக்கும் வகையில் விக்னேஸ்வரன் பேசுவதால் அவர் ஒருபோதும் பிரபாகரன் ஆக முடியாது என்று நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தேன். எனது உரையைச் சிலர் தவறாக விளங்கிவிட்டார்கள்' இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா நேற்றுத் தெரிவித்தார். 18



## வயோதிப பெண்ணிடம் பணம், நகை 'அபேஸ்'

கரணவாய், செப். 10

தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண்ணிடம் இலாவகமாகப் பேசி 2 மோதிரங்கள் மற்றும் 2 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை அபகரித்துள்ளார் மீன் வியாபாரி ஒருவர். கரணவாய் மத்தியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-108)

## 20 தொடர்பில் வெளிப்படை உரையாடல்!

அழைக்கிறார் கரு ஜயசூரிய



கொழும்பு, செப். 10

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் உள்ளடக்கங்கள் தொடர்பில் மக்கள் இன்னமும் போதியளவிற்குத் தெளிவடையாத நிலையில், அதை வெறுமனே ஒரு வெள்ளைத்தாளாகக் கருதப்பட்டு விரிவான கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தினார்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களில் நான்கைத் தவிர ஏனைய அனைத்தையும் நீக்கும் வகையில் 20ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதையடுத்து, அரசமைப்பின் 20ஆவது 18

அதிகாரங்களை இந்தியாவிடம் கேட்பதுபோல்

## இந்திய மீன்பிடி அத்துமீறல்களுக்கும் அவர்களிடமே பேசிக்கொள்ளுங்கள்

அமைச்சர் வாசுதேவ திமிர்த்தனம்



கொழும்பு, செப். 10

'வடக்குக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என இந்தியாவிடம் கேட்பதைப் போலவே வடக்கு கடல் எல்லையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளமை தொடர்பில் இந்தியாவிடம் சென்று தீர்வு காணுங்கள்' இவ்வாறு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உறுப்பத்தி வரிகள் தொடர் 18

## வவுனியாவில் கோரவிபத்து 3 இளைஞர்கள் படுகாயம்!!



வவுனியா, செப். 10

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாம்பல் தோட்டம் பகுதியில் காருடன் மோட்டார் சைக் 18

## இந்திய இழுவைப்படகுகளின் பிரச்சினைக்கு தீர்வு காணுக!

மன்னார் ஆயர் வலியுறுத்தல்

கொழும்பு, செப். 10

இந்திய இழுவைப் படகுகளால் இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்றுமன்னார் ஆயர் இம்மானுவல் பெர்னான்டோ ஆண்டகை தெரி 18

## கடற்தொழில் அமைச்சராக தமிழர்; பாதிக்கப்படுவதும் தமிழர்கள்தான்

சாள்ஸ் சாட்டை

கொழும்பு, செப். 10

வடக்கைச் சேர்ந்தவர் கடற்றொழில் அமைச்சராக இருக் கின்றபோதும் வடக்கில் இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் அண்மைய நாட்களாக அதிகரித்துள்ளது. இந்திய அரசுக்குப் பயந்து இவ்வாறான 18

## தியாகி திலீபனின் நினைவுக்குத் தடை

வவுனியா, செப். 10

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி மரணித்த தியாகி திலீபனின் நினைவு தினத்தைக் கடைப்பிடிக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 18

## குருந்துமலை விகாரைக் கட்டுமானம்: தடைகோரி சட்டத்தரணி சுகாஷ் மனு

முல்லைத்தீவு, செப். 10

முல்லைத்தீவு குருந்துமலையில் விகாரை கட்டுமானப் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன எனதகவல்கள் வெளிவந்தநிலையில், கட்டுமானம் அமைக்கத் தடைகோரி சட்டத்தரணி சுகாஷ் நீதிமன்றத்தை நாடி 18

யாழ்ப்பாணத்தில்

## தவறான முடிவை எடுத்து உயிரிழப்போர் அதிகரிப்பு

வெளிவரும் அதிர்ச்சித் தகவல்கள்

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் தவறான முடிவு எடுத்து 352 பேர் உயிரிழந்துள்ளனர். 18

## 13க்கு எதிர்ப்பை வெளியிடும்

# சரத் வீரசேகரவை பேச்சுக்கு அழைத்தது இந்திய தூதரகம்

கொழும்பு, செ. 10

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாணசபை முறைமை ஆகியவற்றுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு அவற்றை ஒழிக்கவேண்டும் என்று தொடர்ந்து குரல் எழுப்பிவரும் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் பேச்சுக்கு அழைப்பு விடுத்துள்ளது.



மாகாணசபை முறைமை நீக்கப்படவேண்டும் என இராஜாங்க அமைச்சரால் முன்வைக்கப்பட்ட கருத்து தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. இந்தச் சந்திப்பு இவ்வாரம் நடைபெறும் என்று கூறப்படுகின்றது.

மாகாணசபை முறைமை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இற்றைவரை அப்பொறிமுறை ஊடாக மக்களுக்கு ஆற்றப்பட்டுள்ள சேவைகள் தொடர்பில் விரிவானதொரு அறிக்கையை தனக்கு சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத்வீரசேகர பணிப்புரை விடுத்திருந்தார்.

அத்துடன் புதிய அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டு, மாகாணசபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தொடர்ந்து குரல் எழுப்பி வந்திருந்தார். இந்த விடயத்தில் இந்தியா தலையீடு செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்து வந்திருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இந்திய தூதரகத்திடமிருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

'சிநேகபூர்வமான சந்திப்புக்கு இந்தியத் தூதரகம் அழைத்துள்ளது' என்று சரத் வீரசேகர தெரிவித்தார். (மஒ5,44)

# 22ஆம் திகதி வரையில் பேச்சாளராக சுமந்திரனே

கொழும்பு, செப். 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் விவகாரத்தை எதிர்வரும் 22ஆம் திகதி தீர்மானிப்பதென முடிவாகியுள்ளது. 22ஆம் திகதி வரை எம்.ஏ.சுமந்திரன் ஊடகப் பேச்சாளராக தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை 11 மணிக்கு கூடியது. கூட்டத்தில் பங்காளிக்கட்சித் தலைவரான த.சித்தார்த்தன் கலந்து கொள்ளவில்லை. இதனால், பேச்சாளர் விவகாரத்தை நேற்றும் தீர்மானிக்கவில்லை. இன்று மீண்டும் கூடி பேச்சாளரை தீர்மானிக்கலாமா என ஆலோசித்த போதும், இன்றும் சித்தார்த்தன் கலந்துகொள்ளமாட்டார் என்பதால், அடுத்த அமர்வில் 22ஆம் திகதி பேச்சாளரை தீர்மானிப்பதென முடிவாகியுள்ளது. (ம,ஒ,இ)

# வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் அரசியல் கட்சிகள் அசமந்தம்

யாழ்ப்பாணம், செப். 10

2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அரசியல் கட்சிகள் எவையும் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஆசனங்களைக் கைப்பற்றிய கட்சிகளும் அக்கறையற்று இருக்கின்றன.

வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிப்பின்போது ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும், தமது முகவர்களை நியமிப்பதற்கான அதிகாரங்கள் அரசியல் கட்சிகளுக்கு இருக்கின்ற போதும், வடக்கு மாகாணத்தில் எந்தவொரு அரசியல் கட்சியும் தனது முகவர்களை நியமிக்கவில்லை. நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்தப் பதிவு நடவடிக்கைகளின் போது ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும், அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றினதும் முகவர்களது பெயர்களை வழங்குமாறு தேர்தல்கள் திணைக்களத்தால் கட்சிகளின் செயலர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எந்தவொரு அரசியல் கட்சிகளும் முகவர்களை நியமிக்கவில்லை. நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு தமது முகவர்களை நியமித்த அரசியல் கட்சிகள், மிக முக்கியமான வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு தமது முகவர்களை நியமிக்காமல் விட்டுள்ளன.

முகவர்களை நியமிப்பதன் ஊடாக, கிராம அலுவலர்கள் வாக்காளர் பெயர்ப் பதிவுகளை உரியவாறு மேற்கொள்கின்றனரா என்பதை வீடு வீடாகச் சென்று அவதானிப்பதற்கான வாய்ப்புக்கள் அரசியல் கட்சிகளுக்கு கிடைக்கும். இந்தச் சந்தர்ப்பத்தை அரசியல் கட்சிகள் பயன்படுத்தாமல் விட்டுவிட்டு, தேர்தல் நேரத்தில் பலரது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்வாங்கப்படவில்லை என்று கூச்சல் போடுவதில் பயனில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம,ஒ,5)

தேவை

வடிவமைப்பாளர்
Graphic designers

Indesign
Adobe photoshop
Corel draw
என்பவற்றில்
வடிவமைப்பு அனுபவம்
கொண்டவர்களுக்கு
உடனடி வாய்ப்பு

IT Administrator

Manage electronic equipment
Install network and computer system
Maintain, repair and upgrade the operating system including hardware and software
Monitor the performance of existing computer systems and IT infrastructures
முன்னனுபவம் விரும்பத்தக்கது

நீங்கள் பொருத்தமானவரா?
சுயவிவரக் கோவையை
உடனே அனுப்புங்கள்.



சுயவிவரக் கோவைகளை அனுப்ப வேண்டிய முகவரி
மனிதவள முகாமையாளர்,
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
info@uthayan.com

# வடக்கு கடல் எல்லைகளில் கண்காணிப்புத் தொடர்கின்றது

## சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், செப். 10
இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வடக்கு மாகாணத்துக்கு உள்நுழைபவர்கள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:



இந்தியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்துச் செல்கின்றது. யாழ்ப்பாணம், மன்னார் கடற்பிராந்தியங்களின் ஊடாக சட்டவிரோதமாக இந்தியர்கள் உள்நுழைவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. தொண்டைமனாறு கடற்பகுதியில் இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக வந்திறங்கிய 8 பேர் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர். இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக உள்நுழைபவர்கள் தொடர்பில் அவதானமாகச் செயற்படவேண்டும். வடக்கு மாகாண ஆளுநராலும் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடற்படையினரின் ஒத்துழைப்புடன் வடக்குக் கடற் பிரதேசங்களில் தீவிரமான கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்குக் கடற்கரையை அண்டியுள்ள பகுதிகளின் பிரதேச செயலர்கள் கண்காணிப்பு நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். அவர்களது பிரதேசத்துக்கு உட்பட்ட சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கடற்படை மற்றும் இராணுவம், பொது அமைப்புக்கள், மீனவ சங்கங்களின் உதவியுடன் மாதத்துக்கு இரண்டு தடவைகள் கூட்டங்கள் நடத்தி, பொதுமக்களுக்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்க வேண்டும்.
இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக நுழைபவர்களிடமிருந்து கொரோனாத் தொற்று இங்கு பரவுமாக இருந்தால் அதனைக் கட்டுப்படுத்துவது கடினம் என்றார். (ஒ,5,111)

# விவசாயிகளுடன் பிக்கு அடாவடி

## ஜனாதிபதிக்கு சம்பந்தன் கடிதம்

**கொழும்பு,செப்.10**
**கிழக்கு தொல்பொருள் முகாமைத்துவச் செயலணியின் உறுப்பினராக உள்ள பௌத்த பிக்கு ஒருவர், திருகோணமலை திரியாயில் உள்ள விவசாயிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.**



அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
அரிசிமலை விகாரையில் தங்கியுள்ள பௌத்த பிக்கு, திரியாயில் அனுமதிப்பத்திரம் பெற்ற காணிகளில் விவசாயம் செய்வதற்கு, விவசாயிகளுக்கு தடைவிதித்துள்ளார்.
இந்த நிலங்கள் பல்வேறு தனியாருக்கும், அரச அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கும் சொந்தமானது. இங்கு பல தசாப்தங்களாக போருக்கு முன்பிருந்தே விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.
கிழக்கு தொல்பொருள் செயலணியின் உறுப்பினரான, அரிசிமலை விகாரையில் உள்ள பௌத்த பிக்கு, இந்த வயல் நிலத்தில் உழவை மேற்கொண்ட விவசாயிக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கடந்த 23 ஆம் திகதி அங்குள்ள பிள்ளையார் கோவிலில் விழா ஒன்றுக்காகக் கூடியிருந்த மக்களிடம், பொலிஸாருடன் சென்ற பௌத்த பிக்கு, விவசாயம் செய்ய முயன்றால் கைது செய்யப்படுவீர்கள் என்றும் எச்சரிக்கை செய்துள்ளார்.
எனவே குறிப்பிட்ட பௌத்த பிக்கு அல்லது பொலிஸாரின் தலையீடின்றி, விவசாயிகள் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
கிழக்கு தொல்பொருள் செயலணி தொடர்பாக, கடந்த ஜூன் 15 ஆம் திகதியும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பினேன்.
ஆனால் இதுவரை எமக்கு எந்தக் கடிதமும் கிடைக்கவில்லை. என்றுள்ளது. (க-இ)

# 343 பட்டதாரிகளில் 41 பேர் பின்வாங்கல்

வவுனியா,செப்.10
அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான தொழில்வாய்ப்பில், வவுனியா மாவட்டத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்ட 41 பேர் இன்னும் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை என்று வவுனியா மாவட்டச் செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.
தொழில் பெறும் 50 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர் விபரங்கள், உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சின் இணையத்தளத்தில் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.
வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 343 பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் அதில் வெளியிடப்பட்டிருந்தன.
அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலகத்தில் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்றது.
நியமனம் வழங்கப்பட்டு 7 நாள்கள் கடந்தும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொண்ட 41 பட்டதாரிகள் இதுவரை கடமைக்குச் சமுகமளிக்கவில்லை. வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 37 பேரும், வவுனியா தெற்கில்2 பேரும், வவுனியா வடக்குப் பிரிவில் 2 பேரும், கடமைகளைப் பொறப்பேற்கவில்லை. அதேவேளை செட்டிகுளம் பிரிவில் தொழில்வாய்ப்பைப் பெற்ற அனைத்து பட்டதாரிகளும் கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

# மஹிந்த ஏன் பிரபாவை சந்திக்க விரும்பினார்?

## கேள்வி எழுப்புகிறார் சிவாஜி

யாழ்ப்பாணம், செப். 10
கொடிய பயங்கரவாதிகளுக்கு மறுவாழ்வளித்தோம் எனக் கூறும் மகிந்த ராஜபக்ஷ, 2005ஆம் ஆண்டு அப்போதைய நோர்வே நாட்டின் சமாதானத் தூதுவர் ஊடாக தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க ஆசைப்பட்டது ஏன்? என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மஹிந்த ராஜபக்சவின் கருத்துக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து சரணடைந்தவர்களுக்கு மறுவாழ்வளித்தமையை, கொடிய பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வளித்த பெருமை இலங்கைக்கு உரித்தாகுமென நாட்டின் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்த கருத்துத் தொடர்பிலேயே மேற்படி கேள்வி எழுப்பியுள்ளார்
அத்தோடு கடந்த 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த காலத்தில் அப்போதைய நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைவர் பிரபாகரனுடன் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றினை செய்திருந்தார். அது ஏன்?. அத்தோடு ராணுவ உயர் அதிகாரிகளும் நாட்டின் அரசியல் தலைவர்களும் ஏன் தலைவர் பிரபாகரனை பாராட்டுகிறார்கள்? எனவும் நான் கேட்க விரும்புகிறேன் - என்றார். (ம-111)

# 136 பேருக்கு தனிமை முடிவு

கொழும்பு, செப்.10
தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்த 136பேர் இன்று அவர்களது சொந்த இடங்களுக்கு திரும்பவுள்ளனர். இதுவரை மொத்தமாக 38,863 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்துள்ளனர் என கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. தற்போது முத்தரப்புப் படைகளால் பராமரிக்கப்படும் 57 தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் 6,176 பேர் தனிமைப்படுத்தலில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# எதிர்ப்புகள் வலுத்ததால் '20' இல் திருத்தம் மேற்கொள்ளத் தீர்மானம்!

கொழும்பு, செப். 10
எதிர்ப்புகள் வலுத்துவருவதால் அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவில் திருத்தம் மேற்கொள்வதற்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன அரசு தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது. நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போது சில விடயங்கள் மாற்றியமைக்கப்படவுள்ளன. இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவதையும், நாடாளுமன்றம் வருவதையும் தடைசெய்யும் சரத்து 19 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிலையில் '20' மூலம் அதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கு கடும் எதிர்ப்புகள் வலுத்தன. அத்துடன், அமைச்சரவை மற்றும் இராஜாங்க, பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையை முன்பிருந்ததைப் போன்ற 30, 45 என வைத்துக்கொள்வதற்கான திருத்தமும் முன்வைக்கப்படும் எனவும், தேசிய கணக்காய்வு ஆணைக்குழு தொடர்பான மாற்றமொன்று வரவுள்ளது எனவும் தெரியவருகின்றது. அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அவசியம் என்று சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.
எனினும், '20' இல் உள்ள சில சரத்துகள் தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குள்ளேயே அதிருப்தி நிலை உருவாகியுள்ளது. '20'இல் அரசு மாற்றம் செய்யவுள்ளதற்கு இதுவும் ஓர் காரணமாகும் என்று கூறப்படுகின்றது. (ஒ,5,44)

# காற்று வேகமானி ஈராண்டாக இல்லை


## யாழ்ப்பாணத்தில் இந்த நிலைமை

யாழ்ப்பாணம், செப். 10

**காற்றின் வேகத்தை அளவிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணத் தொகுதி (காற்று வேகமானி) செயலிழந்து 2 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், புதிய உபகரணத் தொகுதி இன்னமும் பொருத்தப்படவில்லை. இதனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் காற்றின் வேகம் தற்போது அளவிடப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள வானிலை அவதான நிலையத்தில் காற்றின் வேகத்தை அளவிடுவதற்கான உபகரணத் தொகுதி இயங்கி வந்தது. 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அளவில் அந்தக் கருவி முறிந்து விழுந்தது. இதனால் அதனைப் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. புதிய கருவி கொள்வனவு செய்வதற்கு 75 லட்சம் ரூபா வரையில் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பிரிட்டனிலிருந்தே புதிய உபகரணத் தொகுதி கொள்வனவு செய்யப்பட்டுக் கொண்டு வரப்பட வேண்டும். ஆனால் இதுவரை அந்த உபகரணத் தொகுதி கொள்வனவு செய்யப்படவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ்ப்பாண மாவட்டத்தில் காற்றின் வேகம் அளவிடப்படாமலே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)



## வயாவிளான் மாணவனுக்கு ஜனாதிபதி சாரணர் விருது



யாழ்ப்பாணம்,செப்.10

வயாவிளான் மத்திய கல்லூரி மாணவன் சிங்கராஜன் பகலவன் ஜனாதிபதி சாரணர் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். காங்கேசன்துறை மாவட்ட சாரண ஆணையாளர் எஸ். ஜெயபவன் மாணவனுக்கு சின்னம் சூட்டிக் கௌரவித்தார்.

குப்பிளான் சிவபூமி முதியோர் இல்லத்தில் ஜனாதிபதி சாரணர் விருதுக்கான செயற்றிட்டத்தை மாணவன் முன்னெடுத்திருந்தார்.

கல்லூரியிலிருந்து இந்த விருதைப் பெறும் நான்காவது மாணவன் இவராவார். (க)

## வல்லிபுர ஆழ்வார் வருடாந்த திருவிழா

வடமராட்சி,செப்.10

வரலாற்றுச் சிறப்பு மிக்க துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந் திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 17 நாள்கள் திருவிழாக்கள் இடம் பெறும்.

திருவிழாவில் வசந்த மண்டபப் பூசை முற்பகல் 10.30 மணிக்கும், மாலை 5.30 மணிக்கும் ஆரம்பமாகும் என்று அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 23 ஆம் திகதி குருக்கட்டு விநாயகர் தரிசனமும், 24 ஆம் திகதி வெண்ணெய்த் திருவிழாவும், 25 ஆம் திகதி துகில் திருவிழாவும், 26 ஆம் திகதி பாம்புத் திருவிழாவும், 27 ஆம் திகதி கம்சன் போர்த் திருவிழாவும், 28ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 29ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 30 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், ஒக்ரோபர் முதலாம் திகதி சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 2 ஆம் திகதி கேணித் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழா காலத்தில் அடியவர்களின் நேர்த்திக் கடன்களான அங்கப்பிரதட்சை மற்றும் காவடி எடுத்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

அடியவர்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆலய அறங்காவலர் சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருவிழா நாள்களில் பருத்தித்துறை மந்திகை ஊடாகவும், பருத்தித்துறை தும்பளை ஊடாகவும் சிறப்பு பஸ் சேவைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

## நூல் வெளியீடு

வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் இ.சசிக்குமாரின், சுகாதாரமும் உடற்கல்வியும் வினா விடை தொகுப்பு நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும். வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பழனித்துரை தர்மகுமாரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.பார்த்தீபன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதல்வர் தி.வரதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-422)

## யாழ்ப்பாணத்தில் வழிபாட்டுத் தலங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2018ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 673 வழிபாட்டுத் தலங்கள் காணப்பட்ட நிலையில் 2019ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 726 ஆக அதிகரித்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் புள்ளிவிவரங்களில் இது தெரியவந்துள்ளது.

2018ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 301 இந்து ஆலயங்கள் காணப்பட்டுள்ளன. ரோமன் கத்தோலிக்க ஆலயங்கள் 201, ரோமன் கத்தோலிக்கம் அல்லாத ஆலயங்கள் 76, ஏனைய தேவாலயங்களாக 54 காணப்பட்டுள்ளன. 19 மசூதிகளும், 5 விகாரைகளும் காணப்பட்டுள்ளன. 17 ஏனைய வழிபாட்டுத் தலங்களும் காணப்படுகின்றன என புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இந்து ஆலயங்களின் எண்ணிக்கை 51 இனால் அதிகரித்து 2 ஆயிரத்து 352 ஆக உள்ளது. ரோமன் கத்தோலிக்க ஆலயங்களின் எண்ணிக்கை 20 ஆல் அதிகரித்து 221 ஆக உள்ளது. ரோம் கத்தோலிக்கம் அல்லாத ஆலயங்களின் எண்ணிக்கை 4ஆல் அதிகரித்து 80 ஆக உள்ளது. ஏனைய தேவாலயங்களின் எண்ணிக்கை 5 ஆல் குறைவடைந்து 49 ஆக உள்ளது.

இதேவேளை மசூதிகள் மற்றும் விகாரைகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் இல்லை. (ஒ-5)

## யாழ். மாவட்டத்தில் நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன் வங்கிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

2018ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் வங்கிகளின் 145 கிளைகள் காணப்பட்டன. 2019ஆம் ஆண்டு 17ஆல் அந்த எண்ணிக்கை அதிகரித்து 162 ஆகியுள்ளது. இலங்கை வங்கியே ஆகக் கூடுதலான கிளைகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் கொண்டுள்ளதுடன் அதற்கு அடுத்த நிலையில் மக்கள் வங்கி காணப்படுகின்றது.

2018ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை 51 ஆகக் காணப்பட்ட நிலையில் 2019ஆம் ஆண்டு 12 ஆல் அதிகரித்து 63 ஆகக் காணப்படுகின்றது. (ஒ-5)

## இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்க திட்டம்

கொழும்பு, செப்.10

நாட்டில் உள்ள இலத்திரனியல் உபகரணக் கழிவுகளை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (எ-இ)



யாழ்ப்பாணம் நுழைவாயில் அரிமா கழகத்தின் 2020/2021 ஆண்டுக்கான புதிய நிர்வாகம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. கழகத் தலைவராக லயன் ந.சதீஸ்குமாரும், கழகச் செயலராக லயன் ச.சவீதனும், கழகப் பொருளாளராக லயன் பா.பரிஸ்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர். கழகத்தின் புதிய அங்கத்தவர்களாக கு.பிறேம்காந், ஜெ.ஜெயராஜ், சி.கணுஜன், சி.திவ்யராஜா ஆகியோர் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டது. (எ)

# மாடும் மனிதர்களும்

20ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்களால் கொந்தளித்துக் கொண்டிருக்கும் நாட்டு மக்களின் ஒட்டுமொத்தக் கவனத்தையும் இன்னொரு பக்கமாகத் திருப்புவதில் பிரதமர் மஹிந்த வெற்றிபெற்றிருக்கிறார் என்றே தோன்றுகின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு வரையறையற்ற அதிகாரங்களை மீண்டும் கொடுக்கும் வகையிலான 20ஆம் திருத்தத்துக்கு ஆளும் தரப்பில் இருந்தே அதிருப்திகள் கிளம்பியதால், அதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறமுடியுமா என்ற சந்தேகம் அரசுக்கு எழுந்துள்ளது. எனவே இப்போதைக்கு 20ஆம் திருத்தம் பற்றிய கதையாடல்களை விடுத்து, இன்னொரு பக்கமாகப் பராக்குக்காட்டி எல்லோரது கவனத்தையும் திசைதிருப்ப வேண்டிய நிலை எழுந்தது. அதனாலேயே ஆளும் கட்சி எம்.பிக்களுடனான கலந்துரையாடலின் போது ‘இறைச்சிக்காக மாடு வெட்டுவதைத் தடைசெய்ய வேண்டும்’ என்று ஒரு தீர்மானத்தை பிரதமர் மஹிந்த கொண்டுவர, எல்லா எம்.பிக்களும் அதனை ஆமோதித்து வழிமொழிந்துள்ளனர். இதனால் அதனை விரைவில் சட்டமாக்கும் சாத்தியங்கள் அதிகமுண்டு.

இப்படி ஒரு திசை திருப்பலுக்காக அரசால் முன்வைக்கப்பட்ட ‘இறைச்சிக்காக மாடு வெட்டலைத் தடைசெய்யும்’ யோசனை இரு வேறு கருத்துநிலைகளை உருவாக்கியுள்ளது. ஏற்கனவே பௌத்தர்களும், இந்துக்களும் மாடு வெட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். ஏனெனில் அவர்களது மதரீதியாக மாடு என்பது ஒரு தெய்வீக அம்சம் பொருந்திய விலங்கு. அதனைக் கொல்வதும், உண்பதும் மதக் கொள்கைக்கு விரோதமானது. எனவே மாடுகளை இறைச்சிக்காகக் கொல்லக்கூடாது என்று அதிதீவிர பௌத்தர்களும், இந்துக்களும் கோரி வந்தனர். பசுவதைக்கு எதிராக ஒரு பிக்கு தனக்குத் தானே தீமூட்டி உயிரையே இழந்திருந்தார். அந்த வகையில் பெரும்பாலானோருக்கு மஹிந்தவின் இந்த யோசனை கற்கண்டாக இனிக்கின்றது.

மறுமுனையில், பொதுவாகவே இறைச்சிக்காக மாடு வெட்டும் தொழிலைச் செய்வது முஸ்லிம்களே. நாட்டில் உள்ள பெரும்பாலான மாட்டிறைச்சிக்கடைகள் முஸ்லிம்களுக்கே சொந்தமானவை. அப்படிப்பட்ட நிலையில் இறைச்சிக்காக மாடுகளைக் கொல்வது தடைசெய்யப்பட்டால், முஸ்லிம்களுக்கு மிகப்பெரிய பொருளாதார அடியாக இருக்கும்.

அதேவேளை, இறைச்சிக்காக மாடுகளைக் கொல்லக்கூடாது எனில், பாலுக்காக வளர்க்கப்படும் பசுக்களைத் தவிர காளை மாடுகளை என்ன செய்வது என்ற கேள்வியும் எழுகின்றது. நாளொன்றுக்கு சுமார் 5 ஆயிரம் மாடுகள் வரை அனுமதி பெறப்பட்டு இலங்கையில் வெட்டப்படுகின்றன. ஆனால் தடைச் சட்டம் வந்துவிட்டால், அந்த மாடுகள் எல்லாம் பல்கிப் பெருகி, கால்நடை வளர்ப்போர் அவற்றை என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாற வேண்டியிருக்கும். இதற்குத் தீர்வாக மாட்டிறைச்சியை இறக்குமதி செய்து, இங்கிருந்து மாடுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டமும் இருக்கின்றது என அரசுத்தரப்பு சொல்கிறது. கிட்டத்தட்ட இதுவொரு ‘நனைத்துச் சுமக்கும்’ காரியமே. இங்கிருந்து மிக மலிவான விலைக்கு மாடுகளை வெளிநாடுகளுக்கு விற்றுவிட்டு, அங்கிருந்து பெருந்தொகை கொடுத்து மாட்டிறைச்சியை வாங்குவதென்பது மடத்தனமானது என்பது அடிமுட்டாளுக்கும் தெரிந்த விடயமே.

அப்படியானால் மாடுகளை வெட்டத் தடை கொண்டுவந்துவிட்டு என்ன செய்யப்போகின்றது அரசு?

மாடுகளின் மீது கருணை காட்டுவது வரவேற்கவேண்டிய விடயமே. எதிர்காலத்தில் மாடுகளை வெட்டுபவர்கள் சிறைக்குத்தான் போகவேண்டியிருக்கும். ஆனால் அப்படி மாடுகளை வெட்டுபவர்களை சிறை செய்யக் காத்திருக்கும் இதே அரசுதான் மனிதர்களைக் கொன்றுவிட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட கொடூரர்களை நாடாளுமன்றப் பதவி கொடுத்து அழகு பார்க்கிறது. மாடுகளுக்கு காட்டும் கருணையைக் கொஞ்சமேனும் மனிதர்களிலும் காட்டலாமே.

பாடசாலைகளின்

# சிற்றுண்டிச்சாலைகளை திறப்பதற்கு அனுமதி

கொழும்பு,செப்.10

**பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளை எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

எனினும் சுகாதார அமைச்சின் ஆலோசனை வழிகாட்டல்கள் முழு அளவில் பின்பற்றப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மாகாண கல்விச் செயலாளர்கள், வலய மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்டவர்கள், பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகள் திறப்பது தொடர்பிலான விதிமுறைகள் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக பாடசாலைகளில் இயங்கிய சிற்றுண்டிச்சாலைகள் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



## பட்டாசுகள் வீசியதால் பனை வடலிகள் நாசம்

சாவகச்சேரி,செப்.10

இறுதி ஊர்வலத்தின்போது வீசப்பட்ட பட்டாசுகளால், பெருமளவிலான பனை வடலிகளும், பனை மரங்களும் எரிந்து நாசமாகின.

தீயை அணைக்க பௌசர்களில் தண்ணீர் எடுத்து வரப்பட்டு, நீண்ட நேரத்தின் பின்னர் அணைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழ் தெற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அந்தப் பகுதியில் மரணமான ஒருவரின் இறுதி ஊர்வலம் சென்றபோது, பட்டாசுகள் வெடிக்க வைக்கப்பட்டன. மயானத்தை அண்டிய பகுதியில் வீசப்பட்ட பட்டாசுகள் வெற்றுக் காணியில் வீழ்ந்து தீப்பற்றின.

இறுதி ஊர்வலத்தில் சென்ற பலர் தீயை அணைக்க முற்பட்ட போதிலும், தீ பரவியது. பௌசர்களில் தண்ணீர் எடுத்து வரப்பட்டு தீ அணைக்கப்பட்டது. இருப்பினும் பல பனை வடலிகள் எரிந்து நாசமாகின. (க-9)

## மேலும் 10 பேருக்கு அமைச்சுப் பதவிகள்

கொழும்பு,செப்.10

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் மேலும் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள 5 அமைச்சர் பதவிகளும், 5 இராஜாங்க அமைச்சர் பதவிகளும் வழங்கப்படவுள்ளன.

பதவிகள் எதுவுமின்றி இருக்கும் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த சிலருக்கு இந்த அமைச்சுப் பதவிகள் கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகிறது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலருக்கு இம்முறை அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை.

இதனால், அவர்கள் அதிருப்தியில் இருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. அந்த அதிருப்தியை சமாளிக்கும் வகையில், அவர்களுக்கு இந்த அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# தமிழகத்தில் அகதிகளாகவுள்ளோரை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்காதீர்!

## தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 10

தமிழகத்தில் அகதிகளாகவுள்ள ஈழத் தமிழர்கள் இலங்கையில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு உரித்துடையவர்கள். அவர்களின் வாக்குரிமை இங்கு தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். அவர்களது பெயர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேலும் தெரிவித்ததாவது:

18 வயது நிரம்பிய ஒவ்வொருவரும் வாக்காளர்களாக தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பெயர்களைப் பதிந்துள்ளவர்கள் தங்களது பெயர்கள் தொடர்ந்தும் பதிவில் உள்ளனவா என்பதைச் சரி பார்த்துக் கொள்ளவேண்டும்.

போரால் இடம்பெயர்ந்தவர்கள் பதிவுகளை இழந்திருக்கும் நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத இடங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் பதிவுகள் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை

# சேமலாப நிதி முதலீட்டால் நட்டம் ஏதும் ஏற்படவில்லை

## நிதி இராஜாங்க அமைச்சர் கப்ரால் விளக்கம்



கொழும்பு, செப்.10

**ஊழியர் சேமலாப நிதியை முதலீடு செய்ததன் மூலம் மத்திய வங்கிக்கு எந்த நட்டமும் ஏற்படவில்லை. மாறாக லாபமே கிட்டியிருந்தது. நான் மத்திய வங்கி ஆளுநராக இருந்த காலத்தில் எந்த ஊழல் மோசடிகளும் இடம்பெறவில்லை.**

இவ்வாறு நிதி ராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் மத்திய வங்கி அறிக்கை மீதான சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2007, 2008 காலப்பகுதியில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையப் போகின்றது என்று எதிர்வு கூறிக்கொண்டிருந்தார். ஆனால் எதுவும் இடம்பெறவில்லை.

அதேபோன்று அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஏற்பட்ட பெரும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக அரசாங்கம் பெரும் சிக்கல்களுக்கு முகம்கொடுக்கும் எனவும் அதன் மூலம் பிரயோசனம் எடுக்க தற்போதும் சிலர் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை.

ஊழியர் சேமலாப நிதியத்தில் ஒரு சில பங்குகள் நட்டமடைந்திருக்கின்றன. நட்டமடைந்திருப்பது தொடர்பாக கதைப்பவர்கள் இலாபமடைந்திருப்பது தொடர்பில் கதைப்பதில்லை. மத்திய வங்கி பிணைமுறி அறிக்கையில் நான் ஆளுநராக இருந்த காலத்தில் மத்திய வங்கியில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று எங்கும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் எனது உறவினர்கள் உயர் நிறுவனங்களில் இருந்தமையால் அவர்களுக்கு என்னால் உதவிகள் செய்திருக்கலாம் என்று கருதியே எனக்கு எதிராகக் குற்றங்களைச் சுமத்தினர்- என்றார். (ஏ-இ)

# சு.கவை மறுசீரமைப்பு செய்வதற்கு தீர்மானம்

## மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, செப்.10

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக கட்சியிலுள்ள இளைஞர்கள் மற்றும் பெண்கள் அமைப்புடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்தக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இளைஞர் அமைப்பு மற்றும் பெண்கள் அமைப்புடன் பொதுத் தேர்தலின் பின்னர் தற்போது அவர்களைச் சந்திக்க முடிந்தது. எதிர்வரும் தேர்தல்களின் போது எமது கட்சியின் இளைஞர் அணி மற்றும் பெண்கள் அமைப்பின் உறுப்பினர்கள் தொகையை எவ்வாறு அதிகரித்துக் கொள்வது என்பது தொடர்பில் கலந்துரையாடினோம்.

கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்கவை கட்சியுடன் இணைத்தே செயற்பட வேண்டும். அவரை இணைத்துக் கொள்ளக் கூடாது என்று நான் ஒருபோதும் தெரிவித்ததில்லை. கட்சி பின்னடைவைச் சந்தித்துள்ளது. அதனை நிவர்த்தி செய்து கட்சியை முன்னேற்றுவதற்காக கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கட்சியை முன்னேற்றுவது தொடர்பிலே தற்போது பேச்சு நடத்தி வருகின்றோம்- என்றார். (ஏ-இ)

# பொதுமக்கள் தாக்குதலில் நான்கு பொலிஸார் காயம்

கொழும்பு, செப்.10

பண்டாரகம, அளுத்கம பகுதியில் பிரதேசவாசிகளின் தாக்குதலுக்குள்ளான நான்கு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

அளுத்கம மாராவ பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த நபரொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரை பொலிஸ் நிலையம் நோக்கி அழைத்துச்செல்லும்போது பொலிஸ் வாகனத்தை வழிமறித்த பிரதேசவாசிகள் பொலிஸார் மீது கற்களால் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர்.

அதையடுத்து உண்டான பதற்றமான நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அண்டியுள்ள பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அதிகாரிகளும் பொலிஸ் விசேட அதிரடைப் படையினரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு, நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-இ)

# தப்பியோடிய கைதி சிக்கினார்

கொழும்பு, செப்.10

களுத்துறை வடக்கு சிறைச்சாலையில் இருந்து தப்பிய கைதி மீண்டும் சிறைச்சாலை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கைதியை முச்சக்கர வண்டியில் சிறைச்சாலை அதிகாரிகள் அழைத்துச் சென்றபோது அவர் தப்பியோடியிருந்தார்.

இந்தக் கைதி போதைப்பொருள் பழக்கத்துக்கு அடிமையானவர் என்றும், சிறைச்சாலையில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டவர் என்றும் சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஏ-இ)

# சிவபாலனின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்.செப்.10

யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளருமான பொன். சிவபாலனின் 32 ஆவது வருட நினைவு தினம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் மாலை 5 மணிக்கு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

1998 ஆம் ஆண்டு இதே நாளில் மேயர் பொன். சிவபாலன் உட்பட 18 பேர் நல்லூர் கல்யாண மண்டபத்தில் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டனர். (க)

# புதைக்கப்பட்டிருந்த தோட்டாக்கள் மீட்பு!

திருகோணமலை, செப்.10

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூடக்குடா பிரதேசத்தில் மணலுக்குள் புதைக்கப்பட்டிருந்த 110 தோட்டாக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சம்பூர் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டுள்ளன.

இந்தத் தோட்டாக்கள் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படுபவை எனவும் அவற்றைக் கடற்கலங்களுக்கு எதிராகவும் உபயோகிக்க முடியும் என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்டாக்கள் புதைக்கப்பட்ட இடம் போர்க் காலத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளின் கடற்படை தளம் இருந்த இடம் என் பதால் அவற்றை, விடுதலைப் புலிகள் புதைத்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட தோட்டாக்கள் நீதிமன்ற உத்தரவு பெற்று சிறப்பு அதிரடிப் படையின் உதவியுடன் அழிக்கப்பட உள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஏ-இ)

# வாகனத்தில் சூதாட்டம்; எட்டுப் பெண்கள் கைது

திருகோணமலை, செப்.10

திருகோணமலை சீனன்குடா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலம்போட்டாறு பிரதேசத்தில் வாகனம் ஒன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்ட எட்டு பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சீனன்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

சீனன்குடா பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் வாகனம் ஒன்றைச் சோதனை செய்தபோது சூதாட்டத்தில் ஈடுபட்ட எட்டு பெண்களும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாவுக்கு வாடகை வாகனம் ஒன்றைப் பெற்று அதில் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று ஆரம்ப விசாரணை



களில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 25 வயது முதல் 50 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு தாய் தனது எட்டு வயது மகளையும் தன்னுடன் வைத்துக்கொண்டு சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து 79 ஆயிரத்து 650 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஏ-இ)

# மஹிந்தவின் திட்டத்துக்கு சச்சிதானந்தம் வரவேற்பு

கொழும்பு, செப்.10

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் முன்மொழியப்பட்டுள்ள பசுவதைத் தடைச்சட்டத்துக்கு மறவன்புலவு க.சச்சிதானந்தன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

சிவசேனையின் கோரிக்கையை ஏற்று இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பசுவதைத் தடை சட்டத்தைக் கொண்டு வரவுள்ளார். அனைவரும் மகிழ்ச்சி அடைவர். இலங்கையில் வாழ்கின்ற 30 லட்சம் சைவப் பெருமக்கள் அனைவரும் பிரதமருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது. (ஏ-20)

# தஹாம் சிறிசேன செயலால் சர்ச்சை

கொழும்பு, செப்.10
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன மற்றும் அவரது நண்பர்கள் தேசிய வனவிலங்கு பூங்காக்கள் தொடர்பான சட்டங்களை மீறி எடுத்த ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளன. இது சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

தஹாம் சிறிசேன நண்பர்களுடன் கவுடுல்ல தேசிய வனவிலங்கு பூங்காவுக்கு தனது வாகனத்தில் சென்றுள்ளார். வாகனத்தில் இருந்து வெளியேறி அங்கு சில ஒளிப்படங்களை அவர் எடுத்துள்ளார்.

தேசிய வனவிலங்கு பூங்காவினுள் பாதுகாப்பு காரணங்களுக்கமைய தாங்கள் பயணிக்கும் வாகனங்களில் இருந்து இறங்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு கடுமையான ஆலோசனைகள் வழங்கப்படும்.

இந்தநிலையில் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ள ஒளிப்படங்களின் அடிப்படையில், தஹாம் மற்றும் அவரது நண்பர்கள் அந்தச் சட்டங்களைப் பின்பற்றவில்லை என்று தெரிகின்றது. அது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# செய்யாத குற்றத்துக்கே தூக்கு விதித்தார்களாம்!

## பிரேமலால் கூறுகின்றார்

கொழும்பு, செப்.10
நான் செய்யாத குற்றத்துக்காகவே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எனது கையில் இரத்தமோ, கறையோ இல்லை என்று தெரிவித்துள்ளார் தூக்குத் தண்டனைக் கைதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிரேமலால் ஜயசேகர.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது கை அரசியல் ரீதியாக தூய்மையாகத்தான் உள்ளது. எனக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. அப்போது நீதி அமைச்சராக இருந்த தலதா அத்துகோரள என்னைத் தூக்குக்கு அனுப்புவதில் உறுதியாக இருந்தார். நான் மட்டுமல்லாது, துமிந்த சில்வாவும் கடந்த காலங்களில் அரசியல் பழிவாங்கல்களுக்கு முகம் கொடுத்திருந்தார்.

அதை ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகளே நிரூபித்துவிட்டன. எனக்கெதிராக அவர்கள் அன்று பொய்யான சாட்சிகளை உருவாக்கினார்கள். பாதுகாப்புக் கமராக் காட்சிகள் முதற்கொண்டு அனைத்தையும் பொலிஸாரின் உதவியுடன், எனக்கு எதிராக தயார்படுத்தினார்கள். ஆனால், எனக்கு தெரியும், நான் மனச்சாட்சிக்கு விரோதமாக செயற்படுபவன் அல்லன் என்று. செய்யாத குற்றத்துக்காகத் தான் என்னைத் தண்டித்தார்கள்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையானும் இவ்வாறான அரசியல் பழிவாங்கலால் பாதிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான நிலைமை மாற்றியமைக்க வேண்டும். நான் குற்றமிழைக்காத காரணத்தால் தான் மக்கள் என்னை மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்தார்கள். அதையிட்டு நான் நீதிமன்றம் உள்ளிட்ட அனைத்துத் தரப்புக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார். (எ-இ)

# மின்னஞ்சல் மோசடி; மக்களே அவதானம்

கொழும்பு, செப். 10
மெக்ரோஸ் என்ற கணினி மொழியைப் பயன்படுத்தி கணினிக் குற்றவாளிகள் மின்னஞ்சல் மோசடிகளில் ஈடுபடுகின்றனர் என்று இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அறியப்பட்ட தொடர்பின் ஊடாக இணையப் பயனர்களுக்கு வரும் மின்னஞ்சல்களின் ஊடாக இந்த மோசடிகள் இடம்பெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மின்னஞ்சல்களில் பெரும்பாலானவை மைக்ரோசொஃப்ட் ஒஃபிஸ் ஆவணம், அதாவது அலுவலக ஆவணக் கோப்பு, எக்செல் ஆவணக் கோப்பு அல்லது மைக்ரோசொஃப்ட் ஒஃபீஸ் தொகுப்பு தொடர்பானஆவணக் கோப்புகளின் ஓர் இணைப்பாக உள்ளது. பயனர்கள் குறித்த இணைப்பைத் திறக்கும்போது, மேக்ரோக்களை இயக்குமாறு பயனர் கேட்கப்படுவர்.

மேக்ரோ இயக்கப்பட்ட ஆவணங்கள் தீங்கிழைக்கும் நிரல்களை நிறுவலாம் அல்லது தாக்குதல் நடத்துபவர்களை கணினிகளுடன் இணைக்கவும் தனிப்பட்ட தரவை சேதப்படுத்தவும் பயன்படுத்தப்படலாம் என்று இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு எச்சரித்துள்ளது.

அறியப்பட்ட தொடர்பு என்ற வகையில் வரும் சந்தேகத்துக்கிடமான மின்னஞ்சல் இணைப்புகளைத் திறப்பதைத் தவிர்க்குமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு பயனர்களை அறிவுறுத்தியுள்ளது.

பதிவிறக்கம் செய்யப்பட்ட இணைப்பில் மேக்ரோக்களை இயக்குமாறு கேட்கும் போது பயனர்கள் மேக்ரோக்களை இயக்குவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு கோரியுள்ளது. (எ-இ)

# 19ஐ நீக்கவே மக்கள் ஆணை வழங்கினர்

## கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு, செப்.10
அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்காக மக்கள் வழங்கியுள்ள ஆணையை புறம் தள்ள அரசாங்கம் தயாரில்லை என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்டத்துறை சார்ந்தோர் இதற்குச் சாதகமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அதற்கமைவாகவே திருத்த வரைவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

19ஆவது அரசமைப்பு நீக்கப்படும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசாங்கம் தெரிவித்திருந்தது. அதற்காக மக்கள் வரலாற்றில் முதல் தடவையாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை சமகால அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளார்கள்.

அதை துரிதமாக நிறைவேற்ற முடியாவிட்டால் அது மக்களுக்கு எதிரான துரோகச் செயலாக அமையும் - என்றார். (எ-இ)

# சலுகை விலையில் மரக்கறிப் பொதி!



கொழும்பு, செப்.10
தெரிவு செய்யப்பட்ட பொது இடங்களில் சலுகை விலையில் காய்கறி நிவாரணப் பொதியை விற்பனை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தக் காய்கறி நிவாரணப் பொதியின் விலை 350 ரூபாவாக இருக்கும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பொதிகளில் கரட், உள்ளூர் உருளைக் கிழங்கு, பீன்ஸ், தக்காளி, லீக்ஸ் மற்றும் நோகோல் என ஆறு வகையான காய்கறிகள் அடங்கியிருக்கும்.

இந்த காய்கறிகளின் சந்தை விலை 700 ரூபாவாக இருப்பினும், ஜனாதிபதியின் தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் அதை 350 ரூபா என்ற சலுகை விலையில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விநியோகத்தை தேசிய உணவு மேம்பாட்டு அதிகாரசபை, விவசாய மேம்பாட்டு நிலையங்கள் மூலம் மேற்கொள்கிறது. விவசாயிகளிடமிருந்து எந்தவொரு இடைத் தரகர்களும் இல்லாமல் கொள்வனவு செய்யப்பட்ட மரக்கறிகளே நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த மரக்கறி நிவாரணப் பொதித்திட்டம் முதலில் புறக்கோட்டை, மருதானை ரயில் நிலையங்கள், இசுருபாய, செளசிறிபாய, செட் சிறிபாய மற்றும் நுகேகொட ஆகிய இடங்களில் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணப்பொதிகள் கண்டியில் ஹடபிம அதிகாரசபையின் பங்களிப்புடன் மூன்று இடங்களில் கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# எம்.பிக்களுக்கான சலுகை பிரேமலாலுக்கும் உண்டு!

## சபாநாயகர் விளக்கம்

கொழும்பு, செப்.10
மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக பிரேமலால் ஜயசேகர தெரிவாகியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சகல உரிமைகளும் அவருக்கும் உண்டு.

இவ்வாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவான பிரேமலால் ஜயசேகர எதிர்க்கட்சியின் கடுமையான ஆட்சேபனைக்கு மத்தியில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார்.

இதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். பிரேமலால் ஜயசேகரவின் பதவிப் பிரமாணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சியினர் கறுப்பு பட்டியையும் அணிந்திருந்ததுடன், நாடாளுமன்ற அமர்வில் இருந்து அவர்கள் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

எதிர்க்கட்சியினர் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பதிலளித்தபோதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-இ)

# நீதி அமைச்சர் சப்ரியை சந்தித்தார் டெப்லிட்ஸ்!

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் எலைய்னா பி. டெப்லிட்ஸ் நேற்று முன்தினம் இலங்கையின் நீதி அமைச்சர் அலி சப்ரியுடன் கலந்துரையாடியுள்ளார்.

நீதி அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நீதி அமைச்சுடன் இணைந்து அமெரிக்கா செயற்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் மற்றும் வழிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை, நீதிமன்றத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டிய அவசியம் ஆகியவை விவாதிக்கப்பட்ட பிரச்சினைகளில் முக்கியமானவை என்று தெரிவிக்கப்பட்டது. சிறைச்சாலைகளின் இடநெருக்கடி நிலை தொடர்பிலும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது என்று நீதி அமைச்சு தெரிவித்தது. (எ-இ)

# சமுர்த்தி உதவிகள் வழங்கக் கோரிக்கை

வவுனியா, செப்.10

வவுனியா, சாந்தசோலையில் வசிக்கும் சிறப்புத் தேவையுடைய இரு பிள்ளைகளை உள்ளடக்கிய குடும்பம் ஒன்றுக்கு சமுர்த்தி உதவிகள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சாந்தசோலை மகளிர் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்ததாவது:

சாந்தசோலையில் சமுர்த்திப் பயனாளிகள் தெரிவில் திருப்தி கொள்ள முடியாத நிலைமையே உள்ளது. அன்றாடம் உழைக்கும் மக்களுக்கு சமுர்த்தி உதவிகள் மறுக்கப்பட்டுள்ளன.

சிறப்புத் தேவைக்குட்பட்ட வாய்பேச முடியாத கணவன் மனைவியுடன் வசிக்கும் இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்துக்கு கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக சமுர்த்தி உதவிகள் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு சமுர்த்தி உதவிகளைப் பெற்றுக்கொடுக்கச் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (எ-இ)

# பிணைமுறி மோசடியாளர் சொத்துகளைப் பறியுங்கள்

## வாசுதேவ கோரிக்கை



கொழும்பு, செப்.10

**மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பாக கடந்த காலங்களில் விசாரணைகள் இடம்பெற்றன. எனினும், இதன் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க முடியாத நிலைமையே காணப்படுகிறது.

இந்த நிலையில், மத்திய வங்கி பிணை முறி மோசடியில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களை அரசஉடைமையாக்க வேண்டும் என நான் இவ்வேளையில் கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான குற்றங்களை தடுக்க விசேட சட்டத்திட்டங்களையும் வகுக்க வேண்டும்.

இதன் பிரதானக் குற்றவாளி தற்போது வெளிநாட்டில் உள்ளார். அவரை எவ்வாறு இலங்கைக்கு கொண்டுவருவது என்பது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்- என்றார். (எ-இ)

# போக்குவரத்து மீறல் நால்வருக்கு தண்டம்

சாவகச்சேரி,செப்.10

போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு, ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் காப்புறுதிப்பத்திரம் மற்றும் வாகனவரிப் பத்திரம் ஆகியவை இல்லாது வாகனம் செலுத்தியவர் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவர் ஆகியோருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால், சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில் காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 52 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. நால்வரின் சாரதிய அனுமதிப் பத்திரத்தை ஒரு மாதம் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (க-9)

# நாவற்குழி விகாரையில் மண்டபத்துக்கு அடிக்கல்



நாவற்குழி, செப்.10

நாவற்குழியில் பௌத்த விகாரை அமைந்துள்ள காணியில் பௌத்த மத அடையாளத்தை நிறுவும் நோக்கில் நேற்றுப் புதன் கிழமை அடிக்கல் நடப்பட்டது.

விகாரை அமைந்துள்ள காணிப் பகுதியில் பௌத்த மதம் தொடர்பான நிகழ்வுகளை நடத்தும் நோக்கில் மண்டபம் ஒன்றைக் அமைப்பதற்கான அடிக்கல் விகாராதிபதியால் நடப்பட்டது.

இந்த நிகழ்வில் பௌத்த பிக்கு பெருமளவு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கலந்து கொண்டனர். (எ-159)

# பொருத்தமான அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## விமலிடம் கூறினார் மல்கம் ரஞ்சித்

நாட்டின் தனித்துவம் மற்றும் வரலாற்று ரீதியான நிலைபேறான தன்மை ஆகியவற்றுக்குப் பொருத்தமான வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச, பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அமைச்சர் வீரவன்ச ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறார் எனப் பேராயர் குறிப்பிட்டார் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (எ-இ)

# வீட்டில் மதுபானம் விற்றவர் கைது

யாழ்ப்பாணம்,செப்.10

தன்து வீட்டில் மதுபானப் போத்தல்களை விற்பனை செய்தவர், ஊர்காவற்துறை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டார். காரைநகர் மருதபுரம் ஆலடியில், மதுபானப் போத்தல்கள் விற்பனை செய்கின்றமை தொடர்பில், பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் பொலிஸார் அங்கு சோதனையிட்டனர். விற்பனையில் ஈடுபட்டாரென 65 வயதுடைய நபர் ஒருவரையும் கைதுசெய்தனர். அவரது வீட்டில் 180 மில்லி லீற்றர் கொள்வனவு உடைய 15 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. கைதான முதியவரை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-25)

# அரசு ஓரவஞ்சனை

## அலி சாஹிர் குற்றச்சாட்டு



கொழும்பு, செப்.10

தூக்குத் தண்டனைக் கைதி ஒருவரை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கும் அரசு, ஹிஜாஸ், ஹிஸ்புல்லா போன்றோரை மட்டும் விசாரணைகளின்றி நீண்டகாலமாக ஏன் தடுத்து வைத்திருக்கிறது?

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது டுவீட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொலைக் குற்றவாளி ஒருவருக்கு நீதிமன்றம் தூக்குத் தண்டனையை வழங்குகின்றது. அந்தக் குற்றவாளி ஒரு கொள்கை வகுப்பாளராக நாடாளுமன்றத்துக்குள் நுழைவதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் இரு மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் நடந்துள்ளன.

அதேவேளை, ஹிஜாஸ் ஹிஸ்புல்லா உள்ளடங்கலாக மேலும் பலர் விசாரணைகள் எவையுமின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்குக் காரணம் என்ன? இது நியாயமானதா?. தூக்குத் தண்டனைக் கைதிகள், தீவிரவாதிகள் உள்ளிட்ட இன்னும் யாரெல்லாம் நாடாளுமன்றத்துக்குள் இருக்கிறார்கள்?. அவற்றில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. ஆனால் நாம் அதற்கு எதிர்த்திசையில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம் - என்றார். (எ-இ)

# காணிகளை துப்புரவாக்க அறிவுறுத்தல்

தென்மராட்சியில் உள்ள பல வெற்றுக் காணிகள் கழிவுகளால் நிறைந்துள்ளன. மழை காலம் ஆரம்பித்தால் இந்தக் காணிகளில் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளைத் துப்புரவாக்கி எல்லையிட்டு வைக்க காணி உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால், காணி உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (எ-9)

## இன்றைய நாள்

**மேடம்:** பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். எடுத்த விஷயத்தை முடிக்க சிறு தடைகளைச் சந்திக்க நேரிடும். பணியாளர்களுக்கு நற்செய்தி உண்டு.

**இடபம்:** பதற்றமான நாள். கோபத்தை கட்டுப்படுத்த வேண்டும். கொடுத்த கடனில் ஒருபகுதி திரும்ப வரும். உயர்வதற்கான வழியைத் தேர்ந்தெடுப்பீர்கள்.

**மிதுனம்:** தொழிலில் வேலையாட்கள் சிறு தொல்லைகள் தருவார்கள். பணியாளர்கள் பாராட்டுப் பெறுவர். மன நிறைவான நாள். பல நாள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்..

**கடகம்:** பல நாள் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். இழந்த அமைதி மீளும் நாள். கடந்த நாள்களில் பகைத்துக் கொண்டவர்கள் நட்பாவார்கள். முன்பிருந்த குழப்பங்கள் நீங்கும். நண்பர்களால் சந்தோஷம் கிடைக்கும்.

**சிம்மம்:** குதூகலமான நாள். நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவிற்கு வரும். கலைஞர்களுக்கு புதிய வருமானத்திற்கு வழி ஒன்று தென்படும். நண்பர்களால் மனம் லேசாகும்.

**கன்னி:** நிம்மதி உணரும் நாள். உறவினர் வீட்டு விசேஷங்களில் பங்கேற்பீர்கள். நினைத்த விஷயங்கள் ஈடேறுவதற்கு அதிக முயற்சி எடுப்பீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனக்குழப்பம் அதிகரிக்கும். பிரியமானவர்களுடன் சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டு விலகும். புதிய விவகாரங்களில் விரும்பாத முடிவுகள் கிடைக்கும். செயல்பாடுகளில் கவனம் அவசியம்.


**விருச்சிகம்:** பதற்றம் உருவாகும் நாள். பணியில் குறுக்கீடுகள் வந்து விலகும். குடும்பப் பொறுப்புகள் கூடுவதால் சோர்வடைவீர்கள். வாகனப் பழுதுச் செலவுகள் அதிகம் இருக்காது.

**தனுசு:** தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள். நிதி விஷயங்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள் கணவர் மனைவி வழி உறவினரின் பகை மாறி மகிழ்ச்சி கூடும்.

**மகரம்:** கடின உழைப்பு தேவைப்படும் நாள். நற்செய்திகளால் மனம் மகிழ்ச்சியடையும். உபயோகமற்ற பொருள்களை விலக்குவீர்கள். வியாபாரத்தில் மனச் சாட்சிப்படி நடப்பீர்கள்.

**கும்பம்:** யோகமான நாள். நிதி நிலை உயர எடுத்த முயற்சி வெற்றி பெறும். சுப நிகழ்ச்சி நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**மீனம்:** பணியாளர்கள் பின்விளைவுகளை அறிந்து செயல்படுவது நல்லது. மகிழ்ச்சியான நாள். நல்லவர்களைப் பகைத்துக் கொள்வது தப்பு என உணர்வீர்கள்





வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமான் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. (சு-27)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை வெள்ளி காலை 8 மணி யிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா மாவட்டத்தில்** ஆண்டியப்புளியங்குளம், பூவரசங்குளத்திலிருந்து வாரிக்குட்டியூர் வரை ஆகிய இடங்களிலும்,

**மன்னார் மாவட்டத்தில்** கற்கிடந்தகுளம், தள்ளாடி, கடலோி வீதி, சாந்திபுரம், தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## பெரும்போகத்துக்கு தட்டுப்பாடின்றி உரம் வழங்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, செப்.10

பெரும்போகத்துக்கு அவசியமான உரத்தைத் தட்டுப்பாடின்றி வழங்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். பசளை உற்பத்தி மற்றும் விநியோகங்கள் இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசாங்கம் எதிர்வரும் பெரும்போகத்தில் இந்நாட்டு விவசாய வரலாற்றில் பயிர்ச் செய்கையில் புரட்சி ஒன்றை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றது. கைவிடப்பட்டுள்ள காணிகள் உள்ளிட்ட பரந்தளவிலான பயிர் நிலங்களில் பல தசாப்தங்களின் பின்னர் நெல் உட்பட பல பயிரினங்களை பயிரிடுவதற்கு விவசாயிகள் ஆர்வத்துடன் இருக்கின்றனர்.

இவ்வருடத்தில் இறக்குமதி செய்யப்பட்ட உரத்திற்கு உரிய வகையில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. பெருந்தோட்டங்களுக்கும் விவசாயிகளுக்கும் அவசியமான உரத்தை உரிய அளவில் உரிய நேரத்தில், உயர் தரத்துடன் வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (வ-இ)

## மாணிக்கதாசன் நினைவாக தாகசாந்தி நிலையம் திறப்பு

வவுனியா, செப்.10

தமிழீழ விடுதலை கழகத்தின் இராணுவத் தளபதி மாணிக்கதாசனின் 21 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தாகசாந்தி நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டது.



வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள உமா மகேஸ்வரன் சமாதிக்கு முன்பாக தாகசாந்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) இராணுவத் தளபதியும், உபதலைவருமான நாகலிங்கம் மாணிக்கம் ராஜன் (மாணிக்கதாசன்) மற்றும் அவருடன் இணைந்து "விடுதலைக்கு விதையான" தர்மலிங்கம் தேவராஜா, முருகேசு குணரட்ணம் ஆகியோரின் இருபத்தோராவது நினைவுதினம் புளொட் மற்றும் அதன் அரசியல் பிரிவான டிபிஎல்எவ் தோழர்கள் ஆதரவாளர்களால் நினைவு கூறப்படுகிறது. மாணிக்கதாசனின் நினைவாக, அவரது குடும்ப உறவுகள், தோழர்கள், ஆதரவாளர்களால் "தாகசாந்தி நிலையம்" வவுனியா கோவில்குளம் வீதியில் உள்ள "புளொட்" அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. (சு-110,18)

## 296 பேர் தாயகம் திரும்பினர்

கொழும்பு, செப்.10


மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 296 பேர் நேற்று காலை நாடு திரும்பியுள்ளனர். சவூதி அரேபியாவிலிருந்து 258 பேரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 10 பேரும், கட்டார் டோகாவிலிருந்து 28 பேரும் நாட்டை வந்தடைந்தனர்.

விமான நிலையத்துக்கு வருகை தந்த இவர்கள் அனைவரும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதன் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டனர். (சு-இ)

# உக்காத கழிவுப்பொருள்களை விலைக்கு வாங்க ஏற்பாடு

**சாவகச்சேரி,செப்.10**
**சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகளில் சேரும் உக்காத கழிவுப் பொருள்களை, விலைக்கு வாங்குவதற்கான வள நிலையம் சாவகச்சேரி முன்னைய கடலுணவு விற்பனைப் பிரிவுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது.**



இந்த நிலையம் இன்று வியாழக் கிழமை திறக்கப்படவுள்ளது.
இந்த நிலையத்தில் வீடுகளில் சேகரிக்கப்படும் பாவனைக்கு உதவாத பிளாஸ்ரிக் கழிவுகள், தகரங்கள் உள்ளிட்ட உக்காத பொருள்களைக் கொடுத்து பணம் பெற்றுக் கொள்ள முடியும்.
முதன் முறையாக உக்காத பொருள்களை ஒப்படைக்கும் போது அட்டை ஒன்று வழங்கப்படும். பொதுமக்கள் வழங்கும் பொருள்களின் பெறுமதிக்கேற்ப அட்டையில் உள்ள சதுரங்கள் அடைக்கப்படும். முழுமையாக அடைக்கப்பட்ட அட்டைக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும்.
வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்துக்கு பின்லாந்து, இந்தோனேசியா, இலங்கை ஆகிய நாடுகள் அனுசரணை வழங்கியுள்ளன.
அதேவேளை சாவகச்சேரி நகரசபையின் "நகரைச் சுத்தமாக வைத்திருப் போம்" எனும் திட்டத்தின் கீழ் உக்காத கழிவுப்பொருள்கள் குப்பைகள் அகற்றும் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுனியா,செப்.10
இளம் குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா கூமாங்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட இரண்டாம் குறுக்குத்தெரு வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய ரஞ்சித் வசந் என்பவரே நேற்று முன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டார்.
இவரது மனைவி நான்கு மாதக் கர்ப்பிணியாக உள்ள நிலையில், அவர் நெடுங்கேனி மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். தனிமையில் இருந்த நபர் இவ்வாறு தவறான முடிவெடுத்துள்ளார். அவரது சகோதரன் வீட்டுக்குச் சென்ற போது, குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார். அயலவர்களின் உதவியுடன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பண்டாரிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.
அதேவேளை வவுனியா கூமாங்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த வாரம் 26 வயதுடைய இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மரக்கறி,மீன்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு,செப்.10
நாட்டில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பல வகையான காய்கறிகள் மற்றும் மீன்களின் மொத்த மற்றும் சில்லறை விலை கணிசமாக அதிகரித்துள்ளது.
உற்பத்தி பகுதிகளிலிருந்து வழங்கல் குறைவாக உள்ளமையே இதற்கான காரணம் என்று பொருளாதார மத்திய மையங்கள் தெரிவித்துள்ளன. பாதகமான வானிலை காரணமாக ஏற்படும் இடையூறுகள் மரக்கறிகள் மற்றும் மீன்களின் மொத்த மற்றும் சில்லறை விலையில் உயர்வை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். போஞ்சி, கரட், தக்காளி, சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், உலர்ந்த மிளகாய் மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றின் மொத்த மற்றும் சில்லறை விலை வெகுவாக அதிகரித்துள்ளது.
அதேவேளை மீன்களின் மொத்த மற்றும் சில்லறை விலையும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தம்புள்ளை மற்றும் புறக்கோட்டை பொருளாதார மையங்களில் இவ்வாறு விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பேலியகொட மற்றும் நாரேஹன்பிட்டிச் சந்தைகளில் பெரும்பாலான மீன் வகைகளின் விலை அதிகரித்துள்ளது.
சாதகமற்ற வானிலையால், மீன்பிடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதே இதற்கான காரணம் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (க-இ)




## உப்பு தொழிற்சாலையில் போதைப்பொருள்கள்: இருவர் கைது

புத்தளம், செப்.10
உப்புத் தொழிற்சாலையில் சூட்சுமமான முறையில் அலுமாரிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. புத்தளம் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து, நேற்று முன்தினம் மாலை பழுதிவயலில் உள்ள உப்புத் தொழிற்சாலையில் தேடுதல் நடத்தப்பட்டது. அங்கு அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 65 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மற்றும் 36 கிராம் ஐஸ் போதைப் பொருள்கள் என்பன மீட்கப்பட்டன. சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சொகுசுக் காரொன்றில் திருகோணமலை நிலாவெளிக்கு அவை கடத்தப் படவிருந்தன என்று பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினர் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (க-இ)

## தார் வீதியாக மாறியது கலையாபரணம் வீதி

கொடிகாமம்,செப்.10
மறவன்புலவு மேற்கு கலையாபரணம் கோட்டை வீதி தார் வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.
சுமார் 247 மீற்றர் தூரமான வீதி, சப்ரிகமத் திட்டத்தில் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது
சாவகச்சேரி பிரதேச சபையின் 16 ஆம் வட்டார உறுப்பினர் அ.நிமலரோகனின் முயற்சியால், தார் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. (க-159)



## குப்பைகள் கொட்டுவோரை கண்காணிக்க அதிரடிப்படை?

யாழ்ப்பாணம்,செப்.10
பொது இடங்கள் மற்றும் வெற்றுக் காணிகளில் குப்பைகள் கொட்டுவோரை, விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் கைது செய்ய வேண்டும் என்று வட மாகாண சமுதாய மருத்துவ நிபுணர் மருத்துவர் ஆர்.கேசவன் கோரிக்கை விடுத்தார்.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விசேட கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
வட மாகாணத்திலும் 3 வருடங்களாக கழிவகற்றல் விடயம் தொடர்பில் பேசி வருகின்றோம். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும், சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலகத்தினர், உள்ளூராட்சி மன்றத்தினர் இணைந்து தங்களுடைய பிரதேசங்களில் பொது இடங்களில் குப்பை கொட்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். முதலில் எங்கு குப்பைகள் கொட்டப்படுகின்றன என்பதை அடையாளப்படுத்த வேண்டும். விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறானால் கட்டாயமாக இதனைக் கட்டுப்படுத்த முடியும். பொலித்தீன் மற்றும் இதரகழிவுகளில் மட்டும் தான் டெங்கு பரவக் கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது.
யாழ்.மாவட்டம் டெங்கு எச்சரிக்கையில் உள்வாங்கப்படவில்லை. அந்த நிலைமையை தொடர்ச்சியாகப் பேணுவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். கடந்த வருடம் சில பல்லாயிரக்கணக்கான தொற்று நுளம்புகள் பரவியதன் காரணமாக, அதிக அளவில் நோயாளர்கள் இனங்காணப்பட்டனர்.
மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த, பொது இடங்களில் குப்பை கொட்டுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியும். டெங்குக் கட்டுப்பாட்டு விடயத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் இணைந்து, எதிர் வரும் காலத்தில் டெங்கைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டங்களை துரிதமாக முன்னெடுக்க வேண்டும்- என்றார். (க-111)

## கசிப்பு,கோடா வைத்திருந்த நால்வர் கைது

கிளிநொச்சி,செப்.10
கசிப்பு மற்றும் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்கு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முட்கொம்பனில் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும், 10 ஆயிரம் மில்லி லீற்றர் மற்றும் 5 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரும் பூநகரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அதேவேளை பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சி கோவில் வயலில் 1 லட்சத்து 80 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டார். நால்வரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (க-6)

### தீப்பற்றிய கப்பலில் நச்சுப்பொருள் வெளியேற்றமா?

# ஆய்வுப் பணிகளை ஆரம்பித்தது நாரா

அம்பாறை, செப்.10

நியூ டைமண்ட் கப்பலின் தீ விபத்தையடுத்து அம்பாறை கரையோரங்களில் ஆய்வுப் பணிகளை தேசிய நீர் வழங்கல் ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை (நாரா) நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளது. இதற்கமைய அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை தொடக்கம் ஒலுவில் வரையான கடற் பகுதியில் நீர் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன், மீனவர்களின் வாக்குமூலங்கள் மற்றும் மீன்பிடிக்கப்படும் இடங்களுக்கான பரிசோதனைகள் என்பன மேற்கொள்ளப்பட்டு ஆராயப்பட்டன. கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக அம்பாறை மாவட்டத்தின் கல்முனையை அண்மித்த கடற் பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்களிடம் நாரா நிறுவன அதிகாரிகளினால் நிலைமை தொடர்பில் கலந்தாராயப்பட்டது.

இதன்போது, சில இடங்களில் பிடிக்கப்பட்ட மீன்கள் பச்சை மற்றும் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டன என மீனவர்கள் தெரிவித்துள்ள நிலையில் இந்த விடயம் தொடர்பில் நாரா நிறுவனம் ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது. எனினும் விபத்தின் மூலம் நச்சுப் பொருள் வெளியேற்றப்படுகின்றதா என்பது தொடர்பில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் தெரியவரவில்லை என நாரா நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். இதேவேளை தீ விபத்து ஏற்பட்ட நியூ டைமண்ட் கப்பலினால் சமுத்திரத்துக்கு ஏற்பட்ட பாதிப்புத் தொடர்பில் ஏற்கனவே சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையும் கடலாராய்ச்சியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்தும் மேலதிக பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என நாரா நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## தாதிய உத்தியோகத்தரின் கைபேசி திருடியவர் கைது



யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தாதிய உத்தியோகத்தரின் கைபேசியை திருடிய குற்றச்சாட்டில் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஊசி போடும் விடுதியில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தரின் 34ஆயிரம் ரூபா பெறுமதியான கைபேசி திருடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார், கைபேசியின் எமி இலக்கம் ஊடாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதற்கு அமைவாக மணியம் தோட்டம் அரியாலையைச் சேர்ந்த நபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (ஓ.5,25)

## எண்ணெய்க் கப்பலில் மீளப் பரவிய தீ கட்டுக்குள்



கொழும்பு, செப்.10

சீரற்ற காலநிலையால் நியூ டைமண்ட் கப்பலில் மீண்டும் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என கடற்படை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை கடற்படை இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

7ஆம் திகதி எம்.டி நியூ டைமண்ட் கச்சா எண்ணெய் கப்பலில் மீண்டும் ஏற்பட்ட தீ இன்று அதிகாலை இடர் முகாமைத்துவ குழுக்களால் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் இருந்து இதுவரை தீப்பிழம்புகள் அல்லது புகை எதுவும் காணப்படவில்லை. மேலும், ஒரு டக் படகைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட கப்பல் மீண்டும் ஆழ் கடலுக்கு இழுக்கப்படுகின்றது. அதன்படி, பாதிக்கப்பட்ட எண்ணெய் கப்பல் இப்போது சங்க மங்கந்த பகுதியில் இருந்து சுமார் 37 கடல்மைல் தொலைவில் உள்ளதுடன் கரடுமுரடான கடல் சூழ்நிலையில் மற்றும் பலத்த காற்று மத்தியில் இந்த இடர் முகா மைத்துவ நடவடிக்கை தொடர்கிறது. (வ-இ)

# நியூ டைமன்ட் கப்பல் பணியாளர்கள் 20பேர் அம்பாந்தோட்டை வந்தடைவு

அம்பாந்தோட்டை, செப்.10

எம். டி நியூ டைமன்ட் கப்பல் பணியாளர்கள் 20பேர் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்..

இவர்கள் காலியில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என கடற்படை ஊடகத் தொடர்பாளர் இந்திக டி சில்வா தெரிவித்தார். செப்டெம்பர் 3 ஆம் திகதி 23 பணியாளர்களுடன் நியூ டைமண்ட் கப்பல் தீ விபத்துக்குள்ளானது.

தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடமையுடன் பலத்த தீக்காயங்களுக்குள் ளான மற்றொரு பணியாளர் திருகோணமலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கப்பல் தொடர்பாக கடற்படைக்கு உதவுவதற்காக கப்பலின் கப்டன் இந்திய கடற்படையுடன் உள்ளார். இந்நிலையில் மீதமுள்ள 20 பணியாளர்கள் அம்பாந்தோட்டைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களில் 16 பிலிப்பைன்ஸ் பிரஜைகளும், 4 கிரேக்கப் பிரஜைகளும் உள்ளமை குறிப்பிடத் தக்கது. (வ-இ)




## சத்தமில்லாத சாதனை

பூகோள வரைபடத்தில் இந்தியாவுடன் ஒப்பிட்டால் ஒரு மாங்காய் அளவாகவும், உலக வரைபடத்தில் நோக்கினால் ஓர் எறும்பு அளவாகவும் காணப்படுவது இலங்கை. இவ்வளவு சிறிய நாடான இலங்கை சர்வதேச மட்டத்திலேயே அளப்பரிய சாதனை ஒன்றை சத்தமிடாமல் படைத்துள்ளது. இலங்கை செய்துவரும் சாதனைகளைப் பார்த்து, கின்னஸ் சாதனை தேர்வாளர்களும் திக்குமுக்காடிப் போய் இருக்கின்றனர் போலும். இன்னும் உங்களுக்குப் புரிந்து கொள்ள முடியவில்லையா? அரசமைப்பை மாற்றி மாற்றி எழுதுவதில் தான் இலங்கை புதிய சாதனை படைத்துள்ளது.

ஒரு நாட்டின் அரசமைப்பு சாசனம் தான் அந்நாட்டு மக்களின் தலைவிதியைத் தீர்மானிப்பதாகவுள்ளது. இது மட்டுமல்ல, சர்வதேச நாடுகளின் உதவியும் நட்புறவும் அந்நாட்டின் அடிப்படை அரசமைப்பின் ஸ்திரத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

ஆசியாக் கண்டத்தில் ஒரு வல்லரசாக விளங்கும் இந்தியாவில் இதுவரையில் வெறும் இரண்டே இரண்டு முறைதான் அரசமைப்பில் சில திருத் தங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னரான இந்த 72 வருடங்களில் இதுவரை 19 தடவைகள் மாற்றங்கள் செய்யப்பட்டு, இப் போது 20 ஆவது மாற்றமும் நடக்கப்போகின்றது.

1978 ஆம் ஆண்டுக்குப் பின் இந்த நாட்டின் அரசமைப்பில் இதுவரை 19 திருத்தங்கள் செய்யப்பட்டாலும், அதில் அதி முக்கிய இடத்தைப் பிடித்துள்ளவை 13 ஆம், 17 ஆம், 18 ஆம், 19 ஆம் திருத்தங்கள் தான்.

13 ஆவது திருத்தத்தின் மூலம் நாட்டில் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது அது இன்றுவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவில்லை. 17 வது திருத்தச் சட்டத்தின் மூலம் அரசதுறை பிரதானிகள் பக்கச் சார்பாக அரசியலில் ஈடுபடுவதைத் தடுக்கும் வகையில் அரச சேவைகள் ஆணைக்குழு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் சேவை ஆணைக்குழு என்பவை உருவாக்கப்பட்டு அவை சுயாதீனமாகச் செயற்படும் தன்மை உறுதி செய்யப்பட்டது. இந்த ஆணைக்குழுக்கள் ஜனாதிபதியினால் சிபார்சு செய்யும் நியமனங்களைக்கூட நிராகரிக்கும் தன்னாதிக்கம் கொண்டவையாக இருந்தன. 18வது திருத்தம் மீண்டும் ஜனாதிபதிக்கு சகல நிறைவேற்று அதிகாரங்களையும் தாரைவார்த்தது.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பலமடங்கு குறைக்கப்பட்டு பெரும்பாலான அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்டன. அரசமைப்பு பேரவைக்கும் உயிரூட்டப்பட்டது. ஆனால் இப்பொழுது கோத்தாபய அரசினால் முன்மொழியப்பட்டுள்ள 20 ஆவது திருத்தம் நாட்டை மீண்டும் இருண்ட யுகத்துக்கே கொண்டு போகவுள்ளது. உலகிலேயே அதிக தடவைகள் திருத்தம் செய்யப்பட்ட ஒரு அரச மைப்பு எதுவெனில் அது இலங்கையினுடை யதே.

இப்போது சொல்லுங்கள் இலங்கை அரசமைப்பை மாற்றுவதில் உலக சாதனை படைத்துள்ளது தானே?

- கீதா

# வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தாதீர்

## உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு ஆளுநர் அறிவுரை



**யாழ்ப்பாணம்,செப்.10**
**உள்ளூராட்சி சபைகளுக்கு பிரதேசத்தை ஆளுகின்ற அதிகாரம் உண்டு. எனவே உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், மக்களுக்கு மாறானவற்றைச் செய்யாது, அவர்களுடன் இணைந்து செயற்படவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.**

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், செயலாளர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இதனை வலியுறுத்தினார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை ஆட்சி முறையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கே பல ஆட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே அவற்றின் தலைவர்கள் மக்களின் தலைவர்கள். மக்களை ஒன்றிணைத்து அவர்களுக்கான சேவையாற்றுவது உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களின் பணியாகும். அதிகாரிகள் போன்று நீங்கள் செயற்படக்கூடாது. மக்கள் சந்தைக்கான இடத்தைத் தெரிவு செய்யும் போது, காரணங்களைக் கூறி அவற்றை வேறு இடத்தில் அமைக்கக் கூடாது. அதனால் மக்கள் அவற்றை நாடாது போனால் பொது நிதி விரயமாகும். எனவே மக்கள் எங்கு கோருகின்றனரோ அங்கு சந்தையை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் ஆதன வரி அறவீடுகளை உரிய முறையில் அறவிட்டு பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும்.
வாக்கு வங்கியை இலக்கு வைத்து மக்களுக்கான அபிவிருத்தியைச் செய்யாது விடாதீர்கள். உள்ளூராட்சி மன்றங்களுக்கு பல சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியது அவற்றின் தலைவர்களின் கடமையாகும். நீதிமன்றங்கள் ஊடாக சில பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ள முடியும்- என்றார்.
கலந்துரையாடலில் வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குடிதண்ணீர், பொதுச் சுகாதாரம் மற்றும் பொதுத் துறைகள், ஆளணிப் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. (க)

# உள்ளூராட்சி வீதிகளில் கனரக வாகனப் பாவனை

## கட்டுப்படுத்த நியதிச் சட்டங்களை சபைகளில் நிறைவேற்ற பணிப்பு!!

யாழ்ப்பாணம், செப்.10
உள்ளூராட்சி சபைகளுக்கு உள்பட்ட வீதிகளில் கனரக வாகனங்கள் பாவனையைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு சபையும் தனித் தனியாக நியதிச் சட்டங்களை நிறைவேற்றி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ்.சார்ள்ஸ் பணித்துள்ளார். உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட வீதிகளில் கனரக வாகனங்கள் பயணிப்பதால் வீதிகள் சேதமடைகின்றன என்று சபைகளின் தலைவர்கள் சுட்டிகாட்டியதையடுத்து அவர் இந்த யோசனையை முன்வைத்தார்.
வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், செயலர்களுடன் நேற்றுமுன்தினம் நடத்திய கலந்துரையாடலிலேயே மாகாண ஆளுநர் இதனைச் சுட்டிக்காட்டினார்.
உள்ளூராட்சி சபைகள் ஒவ்வொன்றும் தமது ஆளுகைக்கு உட்பட்ட ஒவ்வொரு வீதிகளிலும் எவ்வளவு நிறையுடைய வாகனங்கள் பயணிக்கலாம், அவை எந்த நாள்களில் பயணிக்கலாம் என்ற விவரங்களுடன் நியதிச் சட்டத்தை நிறைவேற்றி அதனை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். இதன் ஊடாக உள்ளூராட்சி வீதிகளில் கனரக வாகனங்கள் பயணிப்பதைக் கட்டுப்படுத்த முடியும் என்று குறிப்பிட்டார். (ஒ.5)



# சந்தேகத்தில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, செப். 10
முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைளை மேற்கொள்ளும் குழு என்று பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள 'விக்ரர்' குழுவைச் சேர்ந்த ஒருவரை சிறப்பு அதிரடிப் படையினர் நேற்று கைதுசெய்துள்ளனர்.
முல்லைத்தீவு மாமூலைப் பகுதியில் வைத்து சிறப்பு அதிரடிப் படையினர் இவரைக் கைது செய்து, முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.
இதேவேளை, கடந்த 6ஆம் திகதியும் இதே குழுவைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் ஒப்படைத்திருந்தனர். (ஒ.5.19)

# சுவர் வீழ்ந்து பெண் சாவு

கொழும்பு, செப். 10
சீரற்ற காலநிலையால் கம்பஹா, மல்வத்து ஹிரிப்பிட்டிய பகுதியில் வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் 48 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். (ஒ.5)

# 57 வருடங்களாக முன்னெடுக்கப்படாத விலை மதிப்பீட்டு நடவடிக்கைகள்

## உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப். 10
வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் விலை மதிப்பீட்டு நடவடிக்கைகள் 1963ஆம் ஆண்டுக்குப் பின்னர் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் பல சபைகளுக்குரிய வருமானங்கள் பெருமளவு இழக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் தெரிவித்துள்ளனர்.
வடக்கு மாகாண ஆளுநருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.
உள்ளூராட்சி மன்றங்களின் வருமான மார்க்கங்களில் ஒன்றான சோலை வரி உள்ளிட்ட வரி அறவீடுகள் இன்றும் 1963ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்கு அமையவே அறவிடப்பட்டு வருகின்றன. சில இடங்களில் விலை மதிப்பீட்டு நடவடிக்கைகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவையும் முடிக்கப்படவில்லை. விலை மதிப்பீட்டு நடவடிக்கைகளின் தாமதம் காரணமாக உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் வருமானங்களை இழக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.
இது தொடர்பில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் கலந்துரையாடி விரைவில் தீர்வைக் காண்பதாக ஆளுநர் இதன் போது தெரிவித்துள்ளார்.

**ஆளணி இல்லை**

புதிய அரசு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பதவியேற்றது. உள்ளூராட்சி சபைகளின் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என்று தடைபோட்டது. ஒரு லட்சம் வேலை வாய்ப்பு ஊடாக அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்று கூறப்பட்டது. 10 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால், பல இடங்களில் கழிவகற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.
இலங்கை மின்சார சபையினர் தமது இணைப்புகளுக்கு இடையூறாக உள்ள மரங்களின் கிளைகளை வெட்டி வீதிகளில் போடுகின்றனர். அதேபோன்று பொதுமக்களும் வீதிகளில் குப்பைகளைக் கொட்டுகின்றனர். இவற்றை அகற்றுவதில் உள்ளூராட்சி மன்றங்கள் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றன.

**குழாய் கிணறு**

பல இடங்களிலும் எந்த அனுமதியின்றியும் குழாய்க்கிணறுகள் அமைக்கப்படுகின்றன. இவற்றால் நீர் வளம் பாதிக்கப்படும். நீர் வளச் சபைக்கே இதனைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்கள் இருக்கின்றன. அவர்கள் அதனை உரிய முறையில் செயற்படுத்துவதில்லை. சில இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்து குடிதண்ணீரை உறிஞ்சுகின்றனர்.
அவற்றை வியாபார நோக்கோடு வேறு இடங்களில் விற்பனை செய்கின்றனர். இதனால் குடிதண்ணீர் உறிஞ்சப்படும் பகுதிகளில் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் அபாயம் இருக்கின்றது. இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் கோரிக்கை விடுத்த போது, நீர் வளச் சபையினருடன் உரிய கலந்துரையாடல் நடத்தி நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் தெரிவித்தார். (ஒ.5)

# கஞ்சா விற்பனை; பெண்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 10
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரு வேறு பகுதிகளில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட இரு பெண்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.
250 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குருநகர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியில் 50 கிராம் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 32 வயதுடைய பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் கூறினர். (ஒ.5.25)

# சட்டவிரோத சிகரெட்டுகள்: இருவர் கைது

கொழும்பு, செப்.10
அனுமதிப்பத்திரமின்றி வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். டயகம பிரதேசத்திலுள்ள கடைகளில் சிகரெட்டுக்களை விற்பனை செய்து கொண்டிருந்த இவர்கள் டயகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 150 சிகரெட்டு பக்கற்றுக்கள் அடங்கிய 3000 சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளமையுடன், அவர்கள் செலுத்திய முச்சக்கரவண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது. (வ-இ)

மருத்துவர் க.ராகுலன்
பணிப்பாளர், மாவட்ட பொது மருத்துவமனை, கிளிநொச்சி.

# போதையின் பாதையை தகர்க்க....!

(நேற்றைய தொடர்ச்சி)

**இளைய சமூகத்தினரைப் போதைப்பொருள் பாவனையினின்றும் தடுப்பதில் பெற்றோர் , ஆசிரியர்களின் பங்கு**

பெற்றோருக்கான அறிவுறுத்தல்கள்....

1. நோய் வர முதல் தடுப்பதே நன்று. விபத்து இடம் பெறாமல் தடுப்பதே சிறப்பானது. போதையற்ற சமூகத்தை கட்டியெழுப்புவதே உத்தமம்....
2. உங்கள் பிள்ளைகள் உங்களின் கைகளில் பெற்றோரே தங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியில் அதி உச்ச பொறுப்பு மிக்கவர்கள்.....
3. பிள்ளைகளின் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டு, நண்பர்கள் வட்டம், முடிவெடுக்கும் திறன், தொடர்பாடல் முறை, வாழ்க்கைத்திறன் மேம்பாடு போன்ற அதி முக்கிய செயற்பாடுகளில் அக்கறை கொள்ளுங்கள்.....
4. நம் வீட்டுப்பிரச்சனை வேறொருவருடாக அறிதல் நமது பொறுப்புக்கூறலில் தோல்வி என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். தோல்வியடையாதவாறு செயலாற்றுங்கள்....
5. போதைப்பழக்கவழக்கத்தை தடுக்கும் மிகப் பெரும் பொறுப்பு தங்களிடம் உள்ளதை உணர்க. நீங்கள் வீட்டில் இருந்தாலும், பிள்ளைகள் வீட்டை விட்டு வெளிச்செல்லும்போது அவர்களை உணர்வுபூர்வமாக பின்தொடர்க. பிள்ளைகட்கும் நீங்கள் பின் தொடரும் உணர்வைக் கொடுங்கள். அவ்வாறு உணரும் பிள்ளைகள் வழிமாற மாட்டார்கள்.....
6. பிள்ளைகளின் நடவடிக்கைகள், நண்பர் வட்டம் மற்றும் செயற்பாடுகளில் ஏற்படும் சிறு சிறு மாற்றங்களையும் அடையாளம் கொள்க. அவதானிக்கவும், நன்கு ஆராய்ந்து செயலாற்றவும்....
7. பிள்ளைகள் எப்பேற்பட்ட பிரச்சனையையும் உங்களுடன் பகிரத்தக்க, ஆலோசிக்கவல்ல ஆரோக்கியமான 'பெற்றோர்பிள்ளைகள் உறவு நிலையை' கட்டியெழுப்புங்கள்.....
8. பிள்ளைகளின் எதிர்மறை எண்ணங்களை நீக்கி நேர்மறை எண்ணங்களை வளர்த்தெடுங்கள்.....
9. பிள்ளைகளின் மீது கனிவுடன் கூடிய கண்டிப்பு, அக்கறைமிக்க ஆலோசனை, வளமான வழிகாட்டல் வழங்குவதையும் அவர்கள் அவ்வாறே ஏற்றுக்கொள்வதையும் உறுதிப்படுத்துக....
10. உங்கள் பிள்ளைகளின் 'மரியாதைக்குரிய மூத்த தோழன்' எனும் நிலையை பெற முயல்க. அவர்கள் தங்களது அனைத்து பிரச்சினைகளையும் ஐயமின்றி ஆலோசிக்கவல்ல வட்டத்தினுள் நீங்கள் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்....

**ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகம் ஆற்றவேண்டிய கடமை...**

1. மாணவர்களின் இரண்டாம் பெற்றோர் என கருதப்படும் ஆசிரியர்களின் பங்களிப்பு அதிமுக்கியமானது....
2. தற்கால விரைவு உலகில் பல பெற்றோர்களை விட அதிக நேரம் பிள்ளைகளுடன் செலவிடுபவர்கள் நீங்களே....
3. பிள்ளைகளின் மீதான தனிப்பட்ட கண்காணிப்பு மற்றும் அவதானிப்பினூடாக அவர்களின் செயற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களை அறியுங்கள்....
4. பிள்ளைகளுடனும், பெற்றோருடனும் அடிக்கடி ஆரோக்கியமான கலந்துரையாடல் மூலம் பின்னூட்டல்களை வழங்குங்கள்....
5. போதைப்பொருள் பாவனை தொடர்பான பூரண விழிப்புணர்வு, அறிவூட்டல் மற்றும் தெளிவூட்டலை பிள்ளைகளுக்க வழங்குங்கள்....
6. பிள்ளைகளின் வாழ்க்கைத்திறன், சுயமாக முடிவெடுக்கும் திறன் மற்றும் தீரஆராயும் பண்பு போன்றவற்றை வளர்த்தெடுங்கள்....
7. மாணவர்களே மாற்றத்தின் முகவர்கள் என்பதை உணர்க....
8. ஒவ்வொரு மாணவனும் போதைக்கெதிரான பழக்கவழக்கத்தை உடையவனாகவும், ஒவ்வொரு வகுப்பறையும் போதைக்கெதிரான சிறந்த சுற்றாடலாகவும், ஓவ்வொரு பாடசாலையும் போதைக்கெதிரான கலாச்சாரத்தை கட்டியெழுப்பும் போது அது சமூகத்தின் போதைக்கெதிரான உன்னத நிலையையும் "போதையற்ற நாடு" என்ற இலட்சியத்தையும் எட்டச்செய்யும் என்பதை கருத்திற்கொண்டு செயலாற்றுங்கள்....

**போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு...**

போதைப்பாவனை அதிகரித்துவரும் அதே வேளை போதைக்கு அடிமையானவர்களுக்கு தகுந்த சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்து அவர்களை சமூகத்துடன் மீளிணைத்து வளமான எதிர்காலத்துக்கு வித்திட வேண்டிய தேவை சுகாதாரத்துறைக்கு அதி முக்கியமாக உள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையின் 10ம் விடுதியில் இதற்கென தனியான கிளினிக் வசதிகள் வாரா வாரம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உளநல வைத்திய நிபுணர் மருத்துவர் அமில ஹேவாரத்ன மற்றும் மருத்துவர் .ஜெயராசா தலைமையில் இடம்பெறுகின்றன. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தாமாகவே முன்வந்தோ, நண்பர்கள் மூலமாகவோ, அல்லது குடும்ப உறுப்பினர்களின் துணையுடனோ வருகைதந்து சிகிச்சை பெறமுடியும். சிகிச்சை பெறுவோரின் இரகசியத்தன்மை பேணப்படுவதுடன் வைத்தியசாலை மற்றும் சமூக மட்டத்திலான புனர்வாழ்வு நடவடிக்கைகளும் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

ஒவ்வொரு நற்பிரஜையும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கும் போது



# பெண் சுதந்திரம் எங்கே?

ரமேஷ் ரெஜீனா

வன்முறை என்பதை துஷ்பிரயோகம் என பொதுவாக கூறலாம். அதாவது ஒருவர் தனது நலன் கருதி இன்னொருவரை உடல், உள ரீதியாகத் துன்புறுத்தல் அல்லது அவரது சுதந்திரத்தைப் பறித்தல் வன்முறை எனப்படும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எனும் போது உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ,பொருளாதார ரீதியா கவோ, சமூகப்புறக்கணிப்பினாலோ அவை இடம் பெறலாம்.

உடல் ரீதியான வன்முறை எனும்போது, குத்தல், அறைதல், அடக்குமுறையின் கீழ் வைத்திருத்தல், வலுக்கட்டாயமான பாலுறவு கொள்ளல், விரும்பத்தகாத தொடுகை போன்றவற்றைக்கூறலாம். உளரீதியான வன்முறை எனும்போது மதிப்பிழக்கச் செய்தல்,தீய வார்த்தைப் பிரயோகம், பொது இடத்தில் இழிவுப்படுத்தல், அவமரியாதை புரிதல், தற்கொலை மிரட்டல், பார்வை மூலமோ உடல்மொழி மூலமோ மிரட்டி அச்சுறுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறையானது அதிகரித்துக் கொண்டு தான் செல்கிறதே தவிர குறைவதற்கான எந்தவொரு அறிகுறியும் காணப்படவில்லை.வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பல பெண்கள் தினம் தினம் வைத்தியசாலையில் வந்து சிகிச்சை பெற்று வருவது கண்கூடு.

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரையில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படல், சீதனம் கேட்டு துன்புறுத்தல், நெருங்கிய உறவினர்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகுதல் போன்றவற்றை வன்முறை என வகைப்படுத்தலாம். காதலிக்கப்பட்டு கைவிடப்படல், கொலை செய்யப்படல், பெண்கள் பாடசாலைக்கோ அல்லது தொழிலுக்கோ சென்று வருகையில் பாதையில் அல்லது பஸ்களில் வைத்து துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை, அமிலம் ஊற்றப்பட்டு பெண் படுகொலை, நடுவீதியில் வைத்து பெண் கத்தியால் குத்தப்பட்டுக் கொலை,கணவனால் பெண் அடித்துக் கொலை என வடக்கில் இடம்பெறும் பெண்கள் மீதான வன்முறைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

வீட்டு வன்முறை எனும் போது யுத்தத்துக்கு பின்னரான விடுவிக்கப்பட்ட ஆண்கள் கட்டுப்பாட்டை இழந்து பெண்கள் மீது வன்முறைகளை ஏவத் தொடங்கிவிட்டனர். இதனை வெளிப்படுத்தும் விதமாக யாழ் நல்லூர் பிரதேசத்தில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு 9ஆக காணப்பட்ட வீட்டு வன்முறை 2016 ஆம் ஆண்டு 14 ஆக அதிகரித்துள்ளது. தொடர்ந்து 23 வழக்குகள் 2018 இல் பதியப்பட்டுள்ளது. பெண்களுக்கு அதிகமான வேலைச் சுமை, தொழிலில் நிம்மதியின்மை, அதிகமான மிரட்டல்கள் மூலமாகவும் வீட்டு வன்முறை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

வீட்டு வன்முறை எனும்போது ஒரு பெண்ணை அடித்தல், துன்புறுத்துதல் என்பதையும் தாண்டி கணவன் மனைவியை கைவிட்டு இன்னொரு பெண்ணை மணமுடிப்பதும் கூட பெண்ணுக்கு எதிரான வன்முறையாகவே பார்க்கப்படுகின்றது. அத்தோடு சீதனத்துடன் தொடர்பான வன்முறை, திருமணம் செய்து கொள்வது தொடர்பில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டு, அவற்றை மீறல், கர்ப்பத்துக்கு காரணமாக இருந்துவிட்டு அந்தப்பெண்ணை கைவிட்டுச் செல்லல், சந்தேகம் என்பனவும் வீட்டு வன்முறையாகவே கருதப்படுகின்றன.

சமூக,பொருளியல் அல்லது உளவியல் வன்முறையாக, சீதன முறைக்கேடுகள் மற்றும் உளவியல் ரீதியாக தகாத வார்த்தைகளால் துன்புறுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பாக யாசகம் கேட்கும் ஆண்கள் கூட பெண்களை மிரட்டி பணம் கேட்கின்றமையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உளவியல் ரீதியாக , கல்வி கற்ற இளைஞர்களும் கூட பெண்களுக்கு அதிகமான மனச்சோர்வையும் வலிகளையும் ஏற்படுத்துகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டு சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டதாக 26 சிறுவர்களும், பாலியல் துஷ்பிரயோக முயற்சி மேற்கொள்ளப்பட்டதில் பாதிப்புற்ற 10 சிறுவர்களும், உடல் ரீதியான முறைகேட்டுக்கு உட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டதாக 11 சிறுவர்களும் உறவினர்களால் புறக்கணிக்கப்பட்ட 09 சிறுவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்பதற்கான பிரகடனமானது, பெண்களுக்கெதிரான வன்முறைப் பற்றி பின்வருமாறு குறிப்பிப்படுகின்றது.

" ஒரு பெண்ணினுடைய தனிப்பட்ட அல்லது பொதுவாழ்வில் உடல், உளவியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்துச் செயற்பாடுகளும் அல்லது அச்சுறுத்தல்களும் பெண்களுக்கெதிரான வன்முறைகளாகும்." இது பெண்ணின் பலத்துக்கு அப்பாற்பட்ட பலாத்காரத்தை பிரயோகிப்பதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது. அடிப்படையிலேயே இத்தகைய செயற்பாடுகள் அடிப்படை உரிமை மீறல்களாகும்.

இவ்வாறு பெண்களுக்கெதிரான வன்முறையை தடுக்கும் காத்திரமான நடவடிக்கைகளை அரசும் , பொது அமைப்புகளும் மேற்கொள்ள வேண்டும். பால்நிலை வன்முறை தொடர்பாக மக்களுக்கு ,குறிப்பாக பாடசாலை மாணவிகளுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும். குற்றமிழைப்பவர்களுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படல் வேண்டும். பெண்கள் தைரியத்துடன் நடமாடும் நிலைமையை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பால்நிலை சமத்துவத்தைப் பேணுவதோடு, அது தொடர்பான புரிந்துணர்வை ஒவ்வொருவரிடமும் உண்டுபண்ணினால் எதிர்காலத்திலாவது பெண்கள் மீதான வன்முறையை ஒழிக்க முடியாவிட்டாலும், கட்டுப்படுத்தலாம்.



# ஈழத்து சீரடி சாயி நாதனின் “ ஆனந்த ஆராதனை”

# “பஜனைப் பனுவல் வெளியீட்டு விழா”

**10.09.2020**

**வியாழக்கிழமை பூஜைவிவரம்**

காலை: 6 மணி - நண்பகல்: 12.00 மணி

மாலை: 6.15 மணி - இரவு: 07.30 மணி

(காலை 5 மணிமுதல் இரவு 8 மணிவரை திறந்திருக்கும்

## ஆசியுரை

சீராண்டு சார்வரி வருஷம் சீர்தவழும் நல்லூர்ப் பதயில் சீரடி பாபா சுவாமி கோயில் கொண்டு எழுந்தருளி நல்லூர் அருட்டுறையுள் விண்ணுலகிலிருந்து மண்ணுலக்கு அவதாரம் செய்தருளி பாபா சுவாமியிகளின் அற்புதக் கீர்த்தியருளும் பொருட்டு இப்பூவுலகில் இன மதமொழி பேதமின்றி மாந்தர்களுக்கு வழி காட்டியதெய்வமானார். வாழ்வாங்கு வாழ்வதற்கே மனு அவதாரம் எடுத்தத வினார். அதன் பயனாக சீரடி பாபா சுவாமிகளின் பக்தியில் அற்புதப் புகழ் பாடி மனித உலகம் உய்யும் பொருட்டும் யாவரும் நல்லுலகில் வாழும் பொருட்டும் இவ்வுலகில் மேன்மைகொள் சைவ நீதி விளங்க உலகெலாம் அவர்தாம் புகழ்பாடி பக்தியில் இசையமைத்து இசைத்துள்ளார்கள் சுவாமியின் பக்தர்கள் அதன்வெளியீடும் அவர்கள் சாந்தோர் உபயத்தவர்களுக்கும் பற்பல அடியார்கள் நன்மை யடையும் வண்ணம் சீரடி பாபா சுவாமியின் திரு பாத கமலங்களி சரணடைந்து வாழ்த்தி வணங்கி நல்லருள் ஆசிகள் வழங்குகின்றோம்.

*அன்பே சிவமயம்*

**அன்பர் ஷர்மஶ்ரீ வாஸ்தவ - நியுணர்**

## ஆலய அறங்காவலர் வாழ்த்து செய்தி

***ஈழத்து சீரடியான் மெய்யடியார்களே!***

இந்து மகா சமுத்திரத்தின் முத்து என்றும் சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்ட இலங்கைத் தீவின் வடபால் யாழ். மாநகரின் கண்ணே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் நல்லை நாவலர் வீதி மடத்தார் பதியில் வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை வாரி வழங்கும் வள்ளல் பெருமானாய் கலியுக அவதாரனாய் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சாயிநாதன் அற்புதக் கீர்த்திகள் சொல்லிலடங்காதவை. எம் பெருமானது ஆலயத்திலே குருவார அபிஷேகம், பூசை, மகோற்சவம், தேர், தீர்த்தம் போன்றவை சிறப்பாக நடைபெறுவது கண்கூடு. அவதார புருஷனாக எம்பெருமான் சீரடியில் வாழ்ந்த காலத்திலே தாஸ்கணு போன்ற அணுக்கத் தொண்டர்கள் சற்குருவை பாடி மகிழ் வித்தார்கள். அந்த வகையில் எமது அடியவர்களால் ஈழத்து சீரடி சாயிநாதனை போற்றிப்பாடிய பாடல்களை ஒன்று சேர்த்து ஓர் பக்திப் பனுவலாக வெளியீடு செய்வதில் ஆலயத்தினராகிய நாம் மகிழ்வடைகிறோம். அந்த வகையில் “ஆனந்த ஆராதனை” எனும் மகிட மிட்டு வரும் இம் மலர் சாயி நாதன் மெய்யடியாருக்கு ஒரு நல்விருந்தாகும்.

இறைவனை அடைவதற்கு மிவும் சிறந்ததோர் வழிமுறை நாமசங்கீர்த்தனம் ஆகும் சிவபெருமானை சாமகானம் பாடி உருக வைத்தான் இலங்கை வேந்தன் என்பது கற்றறிந்த வரலாறு. அதுபோல் சாயி நாதனை மனம் மொழி மெய்யால் அவன் புகழை உருகிப்பாடி பேரானந்தப் பெருவாழ்வு வாழ இம்மலர் ஒரு உந்து சக்தியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை காலத்தின் கருவூலமாக போற்றி வைக்கப்படும் இப்புனித நூலுக்கு ஆக்கங்களை விரும்பி வழங்கிய சாயிநாதன் அடியவர்களுக்கு வாழ்த் துக்களை தெரிவிப்பதோடு சிரமம் பாராது இம்மலருக்கு தங்களின் ஆசித் செய்தியை வழங்கிய சமயப் பெரியவர்களுக்கும் எமது மாவட்ட செயலருக்கும் எல்லாம் வல்ல சாயிநாதன் திருவருளும் குருவருளும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

***“என்றும் வேண்டும் இன்ப அன்பு”***

**சாயிசேவையில் அறங்காவலர் பா.ராகவன்**

## யாழ் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்து சீரடி சாயி மந்திரின் பனுவல் பாமாலைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த இந்திய துறவிகளில் ஓர் மிகச்சிறந்த மகானாக போற்றப்பட்டு வரும் “சீரடி சாயி பாபா” இந்தியாவின் மகாராஸ்டிரா மாநிலம் அகமது நகர் மாவட்டத்திலுள்ள சீரடி என்ற இடத்தில் பிறந்தவர். சாதி மத பேதம் கடந்த புனித துறவியாக போற்றப்படுவதுடன் தன்னை நாடி வந்த பக்தர்களிற்கு பல அற்புதங்களை நிகழ்த்திக்காட்டியுள்ளார். இவரது போத னைகளும் தத்துவங்களும், கூற்றுக்களும் பொது மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் அளவிற்கு எளிமையான மொழியில் இருந்தது. பல அற்புதங்கள் புரிந்தும் நோயுள்ளவர்களை குணமாக்கியதன் காரணத்தினால் இவரை கடவுளின் அவதாரம் எனக்கருதி தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

சீரடி சாயி பாபா அவர்கள் இந்த மண்ணுலகை விட்டு நீங்கியிருந்தாலும் உலகெங்குமிருந்து பக்தர்கள் அவர் வாழ்ந்து மறைந்த புண்ணிய ஸ்தலமான சீரடிக்கு வருகை தந்தவண்ணம் உள்ளதுடன் சீரடிக்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்ள முடியாத பக்தர்களின் குறைகளை தீர்க்கும் முகமாக 2007ம் ஆண்டு ஈழத்தில் யாழ் நல்லூர் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டின் சிறிய கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 2012ம் ஆண்டு மூலஸ்தான தூபியுடன் மகா கும்பாபிஷேகமும் நடைபெற்று இன்றுவரை அருள்பாலித்து வருகின்றார் என்றால் மிகையாகாது.

சீரடியில் இருப்பது போல் அனைத்து பரிவாரங்களுடன் அமைந்திருப்பதனால் “ஈழத்துச் சீரடி சாயி மந்திர்” எனவும் போற்றப்படுகின்றது. இங்கு பெண்களிற்கு சம உரிமை வழங்கி சுவாமி தூக்கும். நிகழ்வினையும் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்ற காட்சியினையும் காணமுடிகின்றது. இலங்கையில் உள்ள இந்து முறைப்படி உற்சவமும், அபிஷேகங்களும், 2016ம் ஆண்டு 108 யாககுண்ட பூஜை நடைபெற்றதுடன் சித்திரைத் தேர், சிற்பமஞ்சம், சமுத்திரதீர்த்தம், என்பன எங்குமில்லாதவாறு சிறப்பாக நடைபெற்று வருவது குறிப் பிடத்தக்கது. ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் பெருந்திரளான அடியார்கள் நெய்விளக்கேற்றி வழிபாடு செய்வதும் - நேர்த்தி வைத்து அந்த வேண்டுதல் நிறைவேறிய பின் நேர்த்திக்கடனை முடிப்பதற்காக இனிப்புப்பண்டங்கள் மற்றும் அன்னதானம் வழங்குவதும் இந்த ஆலயத்தில் உறையும் தெய்வத்தின் கிருபையாகும்.

இந்த ஈழத்து சீரடி சாயி பாபா திருவுருவம் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் இந்திய புனித தீர்த்தங்களில் தீர்த்தோற்சவம் செய்யப்பட்டதும் இதன் சிறப்பம்சமாகும். இத்தகைய தனித்துவமான பல சிறப்புக்களைக் கொண்ட ஈழத்து சீரடி சாயி பாபா மீது பாமாலை பாடி அவரது புகழ் உலகமெங்கும் மணம்பரப்ப வேண்டுமென வணங்கி நிற்பதோடு அவரது பஜனைப்பனுவலினை வெளியிடுவதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அத்துடன் பஜனைப்பனுவலினை வெளியீடு செய்வதற்காக தம்மை அர்ப்பணித்து அரும்பாடுபட்ட அனைத்து உள்ளங்களிற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த பஜனைப்பனு வில் உள்ள பாமாலைகளால் சீரடி பகவானை ஆராதித்து அருள்பெறுவோமாக! எஸ்.சுதர்சன்

**எஸ். சுதர்சன் - பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**

## விஹாராதி பதியின் ஆசிச் செய்தி

அகில இலங்கை யாழ். நல்லூர் நாவலர் வீதி சீரடி சாயி மந்திர் எனும் ஆன்மீக நிறுவனத்தால் வெளியீடு செய்யப்படவுள்ள பஜனைப் புத்தகமானது ஒரு ஆன்மீக நூலக மக்களை மிகவும் மகிழ்ச்சிப்படுத்தும் நூலாக அமைதல் வேண்டும்.

இந்த பஜனை புத்தகமானது இந்த நாட்டின் சகல மக்களையும் இனம், மதம் மற்றும் குலவேறுபாடின்றி ஒற்றுமைப்படுத்தி சமாதானமாக ஒன்றாக வாழ்வதற்கு ஒரு வழிகாட்டியாகவும் அமைய வேண்டுமென்ற புத்த பகவானின் ஆசீர்வாதம் கிடைக்கும் என்று இந்த புத்தக வெளியீட்டுக்கு ஆசீர்வாதம் செய்கின்றேன்.

**விஹாராதிபதி ஸ்ரீ நாக விகாரை , யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துச்செய்தி

***அன்புடையீர், :***

எல்லா மதங்களும் நல்லவற்றையே சொல்லுகின்றன. எல்லா மதங்களும் தத்தமது சமய அனுஷ்டானங்களுக்கு அமைய பிரார்த்தனைக்கு அறிவுறுத்துகின்றன. ஒவ்வொரு மதங்களிலும் உள்ள தெய்வங்கள் தம்மால் படைக்கப்பட்ட மனிதர்கள் தம்மை படைத்த கடவுளை அறிந்து நேசித்து சேவிக்க (உபயங்களுடாக) வேண்டும் என்று விரும்புகின்றன. இவ் இறைமனித உறவிலே பரஸ்பர சல்லாபிப்புக்களும் , உரையாடல்களும்.மற்றும் பிரார்த்தனைகள்

பயனைகள் , ஓதல்கள் இடம்பெறுவது சகயம். இவ்வார்த்தை பரிமாற்றங்கள் ஒரு வகையில் இறை மனித உறவில் - பரஸ்பர. மனநிறைவையும் புகழாங்கிதத்தையும் வெளிக்கொணர்கின்றன இவ்வாறான ஒரு இறைமனித உறவின் இறுக்கத்தை (நெருக்கத்தை) மேன்மையை கொணர் வதற்காக திருவாளர். கவிஞர் பாலசுப்ரமணியம் சசிகுமார் அவர்களுடைய பிரார்த்தனை தொகுப்பு இறையடியார்களுக்கு துணையாக இருக்கின்றது என்பது நிதர்சன உண்மையும் காலத்தின் தேவையுமாகும். இலத்திரனியல், தொடர்பாடல் ஈர்ப்புக்கள் நிறைந்த இக்கால சமூகத்தினரை இறைவனிடம் அழைத்து செல்ல வழிநடத்தி செல்ல இப் பிரார்தனை (பயனை) கையேடு பேருதவியாய் அமையும். இத்தொகுப்பை தம் எண்ணக்கருவிலிருந்து வடிவமைத்து இறையடியார்களுக்கு பலன் கொடுக்கும் விதமாக பக்தர்களின் கையில் தவழ விட்டிருக்கும் இப்பிரயாசைக்கும் இக்கவிஞர் மேற் கொண்ட பிரயத்தனாங்களுக்கும் எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் ஆசிகளும் எல்லாம் வல்ல பரம் பொருள் இவரது ஆக்கத்திறன் விருத்திக்கு இதுவரை காலமும் கொடுத்தவந்த அருட் பொலி வுக்கும் , வழிநடத்தலுக்கும் பாதுகாப்பிற்கும் நன்றி சொல்வதுடன் இவர் இன்னும் பல பயன் தரு ஆக்கத்திறன்களை வெளிக்கொணர அறிவு சார் ஞானத்தை இவருக்கு ஈர்ந்திட வேண்டுமென்று ஈ சனை கேட்டு ஆசிக்கின்றோம்

**அ . பி. லொசிங்ரன் அ.ம.தி. பரிபாலகர், சாட்டி.**

## ஆசிச் செய்தி

யாழ். நல்லூர் நாவலர் வீதியில் மடத்தார்பதியில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் காத்தற் கடவுள், கலியுகத்தின் அவதாரன் சீரடி சாயி பாபா ஈழத்து சீரடி சாயி எனும் திவ்ய நாமம் தாங்கி உறைந்து அருள் பாலிக்கின்றான்.எம்பெருமானது பெரும்புகழைப் பாடிப் பணிந்து போற்றிட ஆலயத்தினரால் வெளியிடப்படும் பஜனைப் பனுவல் ஆன்மீக உலகுக்கு ஒரு நல்ல வரப்பிரசாதம் ஆகும். பக்தர்களாகிய நாம் இறைவனை நெருங்கும் வழியாகவும் அவன் திருவருட் கடாட் சத்தை பெறுவதற்கு பக்தி ஒரு சிறந்த வழியாகும் அந்த பக்தியை இறைவனோடு சேர்க்க அவன் புகழை மெய்யுருகப்பாடுவதே சாலச் சிறந்ததாகும். அந்த வகையில் “ஆனந்த ஆராதனை” எனும் சிறப்பு மகிட மிட்டு மலர்ந்து மணம் பரப்பவிருக்கும் இந்த பஜனையில் தம் எல்லோரும் அவன் புகழை பாடுவதற்கு ஏதுவாக அமையும் என நம்புகின்றேன். இம் மலரானது மதங்களை கடந்து மனங்களை இணைக்கும் ஒரு ஆன்மீக படையல் இந்த பெரும் முயற்சியை நடைமுறைபடுத்துவதற்கு உழைத்த ஆலயத்தினருக்கும் ஆக்கங்களை நல்கியவர்களுக்கும் வாழ்த்து தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல சாயிநாதன் திருவருளும் சொர்க்கஶ்ரீ தாணு வாசு தேவ சிவாச்சாரியார் குருவருளும் கிடைத்திட வாழ்த்துகின்றேன்.

*மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நீலமிசை நீடு வாழ்வார் - திருக்குறள்*

**ஆலய மஹா கும்பாபிஷேக பிரதமகுரு**
**சொர்க்கஶ்ரீ தாணு வாசுதேவசிவாச்சாரியார் பிரம்மஶ்ரீ வாசு ஜெயவஸ்தாங்க குருக்கள்.**

## அஸ்ஸலாமு அழைக்கும் அல்ஹம்து லில்லாஹ்!

***பாரைப் படைத்து பக்குவமுடன் பரிபாலித்து வரும் பராபரனுக்கே***
***புகழும் பெருமையும்!***

ஈழத்து சீரடி சாயி பஜனைப் பனுவலுக்காக என் மகிழ்ச்சிகரமான வாழ்தறிதலை தெரிவிப்பதில் பேருவகைகொள்கின்றேன் காரணம் பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை என்பதே உண்மையிலும் உண்மை. மக்கள் பணியே தன்சேவை என்ற மனப்பாங்கிலே நல்லவைகளை நயம்பட வழி காட்டியதோர் வைரக்கல் அவர்கள். உலகெல்லாம் இருள்மயமாய் இருக்கும் பொழுது சூரியன் எனும் சுடர் ஒளியைத் தந்து வாழ்வளித்தான் இறைவன் “அற்புதம் எனும் அகவியத்தால் அல்லலுறும் மக்களையும் அவர் தரிசிப்பிற்காய் அவாவுறும் மக்களையும் அன்போடும் கருணையோடும் அனுசரித்து ஆதரித்து அரவணைத்த அவர் தம் வெளியீடு அனைவருக்கும் அரு மருந்தானதே! மாபெரும் சக்தியா அவர் சேவை அனைவர் வாழ்விலும் ஒளி விளக்காய் பிரகாசிக்கிறது! இருளில் கூம்பிக்கிடக்கும் செந்தாமரை பஜனையதால் மலர்கிறது. கூட்டிலிருக்கும் புல்லினங்கள் கீச்சிட்டு அங்கும் இங்கும் சிறகு அடித்து பறந்து தன் மகிழ்வதை பிரஸ்தாபிக்கின்றது. எனவே இப் பயனைமலர் வழிகாட்டும் ஒளிவிளக்காய் பிரகாசிக்கும் என்பதில், எவ்வித ஐயமுமில்லை எப்பவும் இந்த மலர் அனைத்து மக்களுக்கும் ஊழியூழிகாலம் வழிகாட்டணும் என்றும் அவர்கள் நேரான பாதையில் சீராக வாழ்ந்து சிறப்புற இந்த பஜனை மலரை மனம் திறந்து வாழ்த்தி போற்றி வரவேற்று கொள்கிறேன் !

இந்தப்பனுவல் மலர்ந்து மணம் பரப்பிட இறையைப் பிரார்த்திப்பதோடு, இம் முயற்சியை முன்னின் றுழைத்து செப் பணிட்டு சிறப்பிக்கும் “சாயி சேவை குழாத்தினர் நலமும் வளமும் சிறக்க வல்ல இறையை இரு கரம் ஏந்தி துஆச்செய்கின்றேன்

***எனப் பிரார்த்தனை பூக்கள்தாங்கள் அனைவருக்கும்***
***தரணியதில் மலர்ந்து***
***மனதுக்கு மகிழ்வளிக்கட்டும்***

**மௌலவிஅல்ஹாஜ் ஏ.எம்.ஏ அஸீஸ் (காஸிமி)**
**அகில இலங்கை ஜம்மியதுல் உலமாசபை / சர்வமத தலைவர் (பேஷ் இமாம்)**
**சமாதான நீதிவான்.**

“ஈழத்து சீரடி சாயி மந்திர்”
314, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 077 722 2568

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தெற்குபிரதேசசபை,சுன்னாகம்

## 2020

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழுங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காகக் கோருப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது.ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதிபுனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 10.09.2020 தொடக்கம் 23.09.2020ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து **10.09.2020** திகதியிலிருந்து 23.09.2020ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப **15.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாகரூபா.**3000/-** **(வரிநீங்கலாக)**இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 24.09.2020ம் திகதி பி.ப 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கோரப்பட்ட வேலைகளில் 1,2 இலக்க கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து **63(அறுபத்து மூன்று – 26.11.2020)** நாட்களும், 3 தொடக்கம் 13 வரையான கேள்விக்கு செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து **49(நாற்பத்தொன்பது -12.11.2020)** நாட்களாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ். இல | வேலைவிபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் நாட்கள் | வேண்டப் படும் தரம் (வீதி) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 1 | சிங்கத்தின் கலட்டி கிளை வீதி - இணுவில் மேற்கு, பரராஜசேகரப் பிள்ளையார் உப வீதி, பாலாவோடை உப வீதி, தாவடி மயான உபவீதி, கே.கே.எஸ் வீதியின் கிளை வீதி (இணுவில் வைத்தியசாலைக்கு முன் வீதி) | 2.611 Mn | 90 | C8 / C7 | 26,500.00 | 25.12.2020 |
| 2 | சோமராந்தோட்ட வீதி – உடுவில் வடக்கு, அம்பலவாணர் வீதி வினிசிட்டி ஒழுங்கை – உடுவில் மத்தி, அம்மையார் தோட்ட வீதி, அமெரிக்கன் பாடசாலை உள் ஒழுங்கை, ஆர்க்வீதி சந்தி திருத்தம் – உடுவில் வடமத்தி. | 2.003 Mn | 90 | C8 / C7 | 20,000.00 | 25.12.2020 |
| 3 | விவசாய வீதி 1ஆம் குறுக்கு ஒழுங்கை – ஏழாலை தெற்கு, வேம்படி அம்மன் வடக்கு வீதி. | 0.919 Mn | 60 | C9 / C8 | 9,500.00 | 11.12.2020 |
| 4 | உண்டியல் பெட்டி வீதி - ஈவினை | 1.197 Mn | 60 | C9 / C8 | 12,000.00 | 11.12.2020 |
| 5 | பேச்சியம்மன் குறுக்கு வீதி – குப்பிளான் வடக்கு, குப்பிளான் புன்னாலைக்கட்டுவன் குறுக்கு வீதி, குப்பிளான் புன்னாலைக்கட்டுவன் குறுக்கு வீதி சிவபூமி அருகில்– ஏழாலை தெற்கு | 1.382 Mn | 60 | C9 / C8 | 14,000.00 | 11.12.2020 |
| 6 | ஊரெல்லை வீதி உப வீதி - தாவடி | 1.163 Mn | 60 | C9 / C8 | 12,000.00 | 11.12.2020 |
| 7 | சத்தியபுரம் உப ஒழுங்கை – உடுவில், மல்வம் 3ஆம் வீதியின் 1ஆம் குறுக்கு வீதி, கடுகநாவல் வீதி குறுக்கு வீதி – உடுவில் தென்கிழக்கு | 1.172 Mn | 60 | C9 / C8 | 12,000.00 | 11.12.2020 |
| 8 | மயிலணி வீதி 1ஆம் குறுக்கு வீதி, வரியப்புலம் 1ம், 2ம் குறுக்கு வீதி - சுன்னாகம் நகர் வடக்கு, கதிரமலை குறுக்கு வீதி – சுன்னாகம் நகர் தெற்கு | 1.498 Mn | 60 | C9 / C8 | 15,000.00 | 11.12.2020 |
| 9 | தம்பிமுத்துவாத்தியார் 1ஆம் குறுக்கு வீதி, அம்பனை வீதி - சுன்னாகம் நகர் மேற்கு, தவறணை வீதி – உடுவில் வடக்கு | 1.739 Mn | 60 | C9 / C8 | 17,500.00 | 11.12.2020 |
| 10 | மில் வீதி 1ஆம் குறுக்கு வீதி, மில் வீதி 2ஆம் குறுக்கு வீதி, மேனுசா வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ஒழுங்கை | 0.794 Mn | 60 | C9 / C8 | 8,000.00 | 11.12.2020 |
| 11 | தம்புவத்தை ஞான வைரவர் குறுக்கு வீதி, தம்புவத்தை 3ம்,4ம் குறுக்கு வீதி, உசத்தியோடை 2ம் குறுக்கு வீதி, வேலவளவு குறுக்கு வீதி - ஏழாலை | 1.412 Mn | 60 | C9 / C8 | 14,500.00 | 11.12.2020 |
| 12 | புளியடி வைரவர் 1ம், 2ம் குறுக்கு வீதி, திராளை வீதி – ஏழாலை கிழக்கு | 1.252 Mn | 60 | C9 / C8 | 12,500.00 | 11.12.2020 |
| 13 | சூறாவத்தை சந்தரத்தை வைரவர் ஆலய வீதி, காளிகோவில் 3ம் குறுக்கு வீதி, ராமத்தின் சீமா ஞானவைரவர் வீதி – ஏழாலை தெற்கு | 0.975 Mn | 60 | C9 / C8 | 10,000.00 | 11.12.2020 |

11. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 18.09.2020ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

**க.தர்சுஷன்,**
**தவிசாளர்**
**பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம்.**
**10.09.2020.**

# நூல்கள் சேகரிப்போரிடம் இணையவழிச் சந்திப்பு

பாடசாலை மற்றும் கிராம நூலகங்களை உருவாக்கும் அமைப்புகள் மற்றும் நூலகங்களுக்கான நூல்கள் சேகரிக்கும் பணிகளை மேற்கொள்ளும் அமைப்புகளுக்கான இணையவழிச் சந்திப்பு நாளை மறுதினம் சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கு இடம்பெறும்.

சிறகுகள் அமையம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. இணையவழிச் சந்திப்பு Google Meet செயலி (https://meet.google.com/hgebvnscrq) ஊடாக இடம் பெறும்.

சந்திப்பில் இணைந்து கொள்ளுமாறு பணி சார்ந்து இயங்கும் அமைப்பினர் மற்றும் தன்னார்வலர்களை ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர். மேல்திக விவரங்களை 076 524 4966 தொலைபேசி இலக்கம் ஊடாகப் பெறமுடியும். சிறகுகள் அமையம் ஊடாக 6 கிராம நூலகங்கள் மற்றும் 52 பாடசாலைகளுக்கான நூலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

**மணமகள் தேவை**
1979 இல் பிறந்த மணமகனுக்கு (அவிட்டம் பாவம் 92 ¾) மணமகள் தேவை.
**076 164 2643**

**வெள்ளவத்தையில் அறைகள்**
ஒருவருக்கு - 500. இருவருக்கு - 1950
மூவருக்கு 3900 AC
Hotel Villa Co -6
ராமகிஸ்ன செட் அருகில் 077 255 2224

**வேலை வாய்ப்பு**
யாழ் நகரில் உள்ள Work Shop ஒன்றிற்கு தமிழ், ஆங்கிலம் Computer Typing தெரிந்த பெண் வேலை ஆள் தேவை.
**தொடர்பு: 077 651 9913**

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றிற்கு வேலைக்கு ஆண் வேலையாட்கள் தேவை.
(சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)
விள/இல. JF-1023
C/o 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

**பணியாளர் தேவை**
யாழ்நகரில் இயங்கிவரும் ஸ்ருடியோ ஒன்றுக்கு Computer அனுபமுள்ள ஆண், பெண் தேவை. நேரில் வரவும்.
தொடர்பு: 309, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
077 716 2339

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான இந்திய சீன உணவகம் மற்றும் தங்ககத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.
Stewards, Assistant cook,
Cleaners, Kitchen helpers,
House keeping staffs.
உணவு, தங்குமிடம் இலவசம்
தொடர்புகளுக்கு : 0774649297

பிரபல்ய மருந்தகமான
**City Medicals**- யாழ்ப்பாணம்
பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில் சார்ந்த நபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
**குறிப்பு**
**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்**
தொடர்புகளுக்கு
077 734 7578 } Monday-Saturday
021 221 7664 } (9.00am-5.00pm)
077 734 7578 Sunday 9.00am-5.00pm

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25.09.1934
உதிர்வு 23.08.2019

அமரர்
**சின்னத்துரை மயில்வாகனம்**
(முன்னாள் மயில்வாகனம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்-நந்தாவில்)

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே!
கண் மூடி முழிக்குமுன்னே
எம்மை விட்டு சென்று ஓராண்டானதே!
காலன் உங்களைக் காலத்தால் அழைத்த வேளை
அத்துன்பத்தை ஏற்றுக்கொள்ள எம் மனத்தால் முடியவில்லை!
எம் இதயங்களில் என்றும் நீங்கள் குடியிருப்பீர்கள்
எம் வாழ்வுவரை நிழலாய் நீங்கள் இருப்பீர்கள்
இன்னொரு பிறப்பு இருப்பது உண்மையென்றால்
அப்போதும் நீங்களே எங்களுக்கு அப்பாவாக
வரவேண்டும் என்ற வரத்தையே வேண்டுகிறோம்!
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நெட்டிலிப்பாய் வீதி, குமரகோட்டம், கோண்டாவில்,
தொ.பே.இல:077 6620 905
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
24.03.1949

இறப்பு
03.09.2018



எம்மையே நினைத்து எமக்காகவே வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அப்பா!

**அமரர் இளையவி சின்னராசா**
(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர் அனைவரும் போற்ற
வாழ்ந்து காட்டிய அப்பாவே - நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில் சுடர் விட்டுக் கொண்டிருக்கும்
குலவிளக்கே அப்பா!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டிரண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் பிரியாது
இன்று (10.09.2020) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

39, அரசடிவீதி,
5ஆம் ஒழுங்கை, நல்லூர்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



திரு. கிருஷ்ணசாமி ஐயர்
**விஸ்வநாதசர்மா**
(ஓய்வுபெற்ற முகாமையாளர்-மக்கள் வங்கி)

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியை பிறப்பிடமாகவும் இல.68,1/3, ஹம்டன் லேன், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கிருஷ்ணசாமி ஐயர் - விஸ்வநாதசர்மா அவர்கள் 07.09.2020 அன்று Australia, Melbourne நகரில் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.09.2020 செவ்வாய்க்கிழமை Melbourne நகரில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : மகன்
தொ.இல- 0777773802


# கடன் வழங்குவதில் தளர்வான கொள்கையைக் கடைப்பிடிக்குக

### அனைத்து அரச வங்கிகளின் தலைவர்களுக்கும் பிரதமர் அறிவுறுத்தல்



கொழும்பு, செப். 10

பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள மக்களை அதிலிருந்து மீட்டெடுப்பதற்கு கடன்களை வழங்கும்போது தளர்வான கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறு அத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று அரச வங்கிகளின் தலைவர்களுக்கு அறிவுறுத்தினார்.

நிதி அமைச்சில் நடைபெற்ற நிதி அமைச்சின் முன்னேற்ற மறுஆய்வுக் கூட்டத்தின் போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார் என்று பிரதமரின் ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடனை மீளச் செலுத்துவதற்கு முடியாத மற்றும் புதிதாகக் கடன் பெறுவதற்கு வரும் பொதுமக்களை வங்கி நடவடிக்கைகளின்போது தேவையற்ற சிரமத்திற்கு உட்படுத்த வேண்டாம் என்றும் பிரதமர் தெரிவித்தார். இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் தரவுகளைச் சரிபார்க்கும் செயற்பாட்டின்போது பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்கள் தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இதன்போது கவனத்திற்கு கொண்டுவந்தார்.

கடன் பெற்று ஒருவர் - அதனை மீளச்செலுத்தத் தவறும் பட்சத்தில், அவருக்கு உத்தரவாதம் வழங்கும் நபரின் பெயர் இலங்கை கொடுகடன் தகவல் பனியகத்தின் தரவுகளில் உள்ளடக்கப்படுவதால் குறித்த நபர் கடனொன்றைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியற்றவராக விளங்குகின்றமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய பிரதமர், அதற்கு உரிய நிவாரண நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கூறினார் என்றுள்ளது. (மஇ)


## ஆசிரியர் தேவை

**பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு சாவகச்சேரி, நல்லூர், கோப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம்** ஆகிய இடங்களில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 408 3656, 077 468 2951

## கண்ணீர் அஞ்சலி

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும் **திரு. தம்பிராசா சுரேஸ்குமார்** அவர்களின் அன்புத் தாயார்

**தம்பிராசா இலட்சுமி**

அவர்கள் 09.09.2020 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது திணைக்கள உத்தியோகத்தர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ் மாவட்ட மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் /
அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

## பனைசார் உணவுற்பத்தியும் தரக்கட்டுப்பாடும் சான்றிதழ் கற்கைநெறி

VTA

பனைசார் நன்மைகளினைக் கருத்தில் கொண்டு அதனை மேம்படுத்தும் முகமாக பனை அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை இணைந்து பனைசார் உணவுபத்தியும் தரக்கட்டுப்பாடும் என்ற மூன்று மாத சான்றிதழ் கற்கைநெறியினை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் இக் கற்கை நெறியினை பயில விரும்பும் 16 தொடக்கம் 35 வயதுள்ள ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் மற்றும் பனை சார் தொழிலில் ஈடுபடுபவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் தரக்கட்டுப்பாடு),**
**பனை ஆராய்ச்சி நிறுவனம், கண்டி வீதி கைதடி.**
**தொடர்பு இல: 021 205 7065**
**தொலைநகல் (பக்ஸ்): 021 205 7066**

அல்லது சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவையினை மேற்குறிப்பிட்ட முகவரிக்கு/ மின்னஞ்சல் முகவரிக்கு (palmyrahcertcourse2020@gmail.com) அனுப்பி இக்கற்கைநெறியினுள் உள்நுழைய முடியும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 14.09.2020.

## யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரி
## Jaffna Film College

Diploma in photography 2020



புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
துறைசார் கற்றல்களுக்கான கல்வித்தகமைகள்
தொழில்முறை திறமைக்கான புதிய பாடத்திட்டங்கள்
DREAM CAREER OPPORTUNITIES
பதிவுகளுக்கு முந்துங்கள்!
021 2224550 / 0761380212
யாழ்ப்பாணம் திரைப்படக் கல்லூரி / Jaffna Film College
உங்கள் திறமைக்கும், தேடலுக்குமான வழிகாட்டி
No:15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna


மலேசியாவில்

## இலங்கைத் தமிழர் அடித்துக் கொலை

இலங்கையிலிருந்து பாதுகாப்புத் தேடி மலேசியவில் தஞ்சம் புகுந்திருந்த தமிழர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். கணபதிப்பிள்ளை விவேகானந்தன்' என்ற இளைஞன் கடந்த 3ஆம் திகதி மர்ம நபர்கள் சிலரால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் கடந்த 6ஆம் திகதி நண்பகல் உயிரிழந்தார். மலேசியப் பொலிஸார் இதுதொடர்பில் மலேசிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-இ)

# நீங்கா நினைவலைகள்

19ஆம் ஆண்டு 1ஆம் ஆண்டு



| பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை | | பத்மாசனி கணபதிப்பிள்ளை | |
|---|---|---|---|
| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| 01.01.1915 | 08.01.2001 | 06.07.1929 | 23.08.2019 |

திதி: பூர்வபக்க சதுர்த்தசி

திதி: அபரபக்க அட்டமி

அம்மனின் அருள் பெற்று கடமை கண்ணியம் கட்டுப்பாடு தவறாது ஆசிரியராய், அதிபராய் கடமையாற்றிய **அமரர் பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை** அவர்களுக்கும் அழகும் அறிவாற்றலும் நிறைந்த தொண்ணூறு வயதுவரை நினைவாற்றலுடன் வாழ்ந்த **அமரர் பத்மாசனி கணபதிப்பிள்ளை** அவர்களுக்கும் அவர் தம் பிள்ளைகள் எழுவரதும் உளமார்ந்த நினைவஞ்சலி. எம்மையெல்லாம் ஊர்போற்ற வாழவைத்த அன்புத் தெய்வங்களை உளமார நினைந்து மனமார வணங்குகின்றோம்.

**என்றும் உங்கள் நினைவில் வாழும்**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

**வளலாய் மேற்கு,**
**அச்சுவேலி.**

## துயர் பகிர்கின்றோம்



பிறப்பு : 10.04.1942
இறப்பு : 08.09.2020

எமது கல்லூரி ஆசிரியர் நித்தியானந்தராஜா அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி யோகமணி திருநாவுக்கரசு**


அவர்கள் 08.09.2020 அன்று இறைபதமெய்தினார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர் சங்கம்**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23.12.1966 | 05.09.2020 |

### மாரிமுத்து யோகராஜா



யாழ்ப்பாணம் கன்னாதிட்டியை பிறப்பிடமாகவும் தற்போது இந்தியா வரசலவாக்கம் என்னும் இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து யோகராஜா கடந்த (05.09.2020) சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து புஸ்பவதி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்ற முத்துபிச்சை ஆசாரி (பிச்சை கராஜ் கிளிநொச்சி) ஜெயலச்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும். லதாவின் அன்பு கணவரும். விக்சனாவின் அன்பு தகப்பனும். மா.மகேஸ்வரன் (நிதர்சனா நகையகம் வட்டக்கச்சி). மா.கோணேஸ்வரன். மா.பாலமுரளி. மா.தமிழ்ச்செல்வன் கணேஸ்-கிரியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசலிங்கம் (கணேஸ்-இந்தியா). ராஜசேகர் (லண்டன்). சுரேஸ் (இத்தாலி). காமராஜ் (கனடா). விஜயலச்சுமி (இந்தியா). கோணேஸ்-ராஜம் (மன்னார்). மகேஸ்வரன்-ஜீவசக்தி (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும். நிதர்சனா விதுசனா காலஞ்சென்ற விஸ்ணுஜன். டிலக்சன். அனுஜன் (Aquinas College-Jaffna) ஆகியோரின் அன்பு சித்தப்பாவும். நிலோஜினி (மொரட்டுவ பல்கலைக்கழகம்). விதுசன். சஞ்சை ஆகியோரின் அன்பு பெரியப்பாவும். தனுஸ்காந்தின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.09.2020 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் (இந்தியாவில்) நடைபெற்று. பூதவுடல் போரூர் மாவனூர் இந்தியா என்னும் இடத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல:220, பழைய கண்டி வீதி,**
**வட்டக்கச்சி.**
**077 438 7205**

**தகவல்:**
**மா.மகேஸ்வரன் (சகோதரன்)**
**நிதர்ஷனா நகையகம்**
**வட்டக்கச்சி.**

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுப் புதன்கிழமை வழங்கப்பட்டன. அதிபர் லலிதா முகுந்தன் தலைமையில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கல்லூரி மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். நிகழ்வில் வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (சு-159)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06.01.1940 | 09.09.2020 |

### பொன்னையா துரைசிங்கம்

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியில் வசித்தவரும் தற்போது கரவெட்டி அனிஞ்சிலடியில் வசித்து வந்த பொன்னையா துரைசிங்கம் நேற்று (09.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும். புனிதவதியின் பாசமிகு கணவரும். காமினி. சுதர்சன் (குயிரசி பான்சி - கிளிநொச்சி). கிருபாகரன் (கனடா). காலஞ்சென்ற சதீஸ் (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும். தங்கராசா. ஜெயகௌரி. சந்திரகலா (கனடா). சிவப்பிரியா ஆகியோரின் பாசமிகு மாமனும். காலஞ்சென்றவர்களான செல்லம்மா. சண்முகராசா. தங்கரெத்தினம். கணேசன். சபாரெத்தினம். சற்குணம் மற்றும் லட்சுமியின் சகோதரனும், விதுசன் (கனடா). தனுசன். மதுசன். டதுசன். சரணிகா. சண்ஜிதா. கிஷாந் (கனடா). சாருகா (கனடா). கனிஷ் (கனடா). ஜிஷாந். கிந்துசன். நிருசான், நாகஜனனி. தரணிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2020) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் தங்கராசா காமியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி வெரக்கழி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கரவெட்டி**
**அனிஞ்சிலடி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.07.1962 | 09.09.2020 |

### சிதம்பரநாதன் நேமிநாதன் (நேமி)

கலட்டி அம்மன் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் நேமிநாதன் நேற்று (09.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் (சித்தஆயுர்வேத வைத்தியர்) சரஸ்வதி அவர்களின் அருமைப் புத்திரனும், காசிநாதன் (பிரான்ஸ்), கிரிசாம்பாள், தவநாதன், முருகதாஸ் (பிரான்ஸ்), றோகசாந்தன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், கஜேந்திரன், கோபாலகிஷ்ணன், அஜந்தன், கஜலஷ்மி, நிரஞ்சனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2020)வியாழக்கிழமை இன்பம் மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.20, கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 20 தொடர்பில்...

திருத்தம் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதனூடாக 19ஆவது திருத்தத்தில் குறைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் அவருக்கே வழங்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கரு ஜயசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது முன்மொழியப்பட்டிருக்கின்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் மீது இன்னமும் கவனம் குவிக்கப்படாத நிலையில், அதன் உள்ளடக்கங்கள் தொடர்பில் மக்கள் போதியளவு தெளிவடையாத நிலையே காணப்படுகின்றது. அதிலுள்ள முன்மொழிவுகள் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருப்பதனால் அதனையொரு வெள்ளைக் காகிதமாகக் கருதி, அதுகுறித்து மக்கள் மத்தியில் விரிவான கலந்துரையாடலை ஏற்படுத்தவேண்டும். அதேவேளை இந்த 20ஆவது திருத்தத்தை நிறை வேற்றிக் கொள்வதற்கு அவரசம் காண்பிக்கக்கூடாது. விரிவான தர்க்கத்துக்கு 20ஆவது திருத்தத்தை உட்படுத்த வேண்டும் என்றார். (ம-இ)

## கடற்றொழில்...

அத்துமீறல்களை அரசு அனுமதிக்கின்றதா எனத் தெரியவில்லை' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற உற்பத்தி வரிகள் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

'வடக்கு மாகாணத்தில் கடற்றொழிலாளர் தமது தொழிலை மேற்கொள்ள முடியாத வகையில் இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகள் மூலம் எமது கடலில் உள்ள மீன்வளத்தைச் சூறையாடி செல்கின்றனர். மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என வடக்கின் நான்கு மாவட்டங்களின் மீனவர்கள் இதனால் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

வடக்கைச் சார்ந்த ஒருவர்தான் கடற்றொழில் அமைச்சராக உள்ளார். இன்றும் (நேற்றும்) இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் தொடர்பாக பேசாலை மீனவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். பிரதமர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். கடற்றொழிலுக்குச் செல்ல முடியாத வகையில் அங்குள்ள மீனவக் குடும்பங்கள் உள்ளன. இழுவைப் படகுகளைக் கட்டுப்படுத்துவது குறித்து 2018இல் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், குறித்த சட்டம் அரசுக்கு சார்பானவர்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது. இந்திய அரசுக்குப் பயந்து இவ்வாறு செயற்படுகின்றனரா எனத் தெரியவில்லை' என்றார். (ம-22)

## குருந்துமலை...

னார். இதையடுத்து முல்லைத்தீவு தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தொல்பொருள் திணைக்கள மாவட்ட அதிகாரி ஆகியோரை இன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முல்லைத்தீவு குருந்துமலையில் விகாரை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிக்கு எதிராக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கை மன்றில் அழைக்குமாறு கிராம மக்கள் சார்பில் சட்டத்தரணி க.சுகாஷ் நேற்று நகர்த்தல் பத்திரம் அணைத்து விண்ணப்பம் செய்தார்.

அதனடிப்படையில் வழக்கு திறந்த மன்றில் அழைக்கப்பட்டது.

'குருந்துமலையில் வைரவர் சூலம் முறித்து அகற்றப்பட்டு அங்கு விகாரை அமைக்கும் கட்டுமானங்களை நாளை ஆரம்பிக்க உள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதனால் அந்தக் கட்டுமானப் பணிகளை இடைநிறுத்த கட்டளையிடப்பட வேண்டும்' என்று சட்டத்தரணி க.சுகாஷ் மன்றுரைத்தார்.

வழக்கின் எதிர்த்தரப்பினரான முல்லைத்தீவு பொலிஸார், தொல்பொருள் திணைக்களத்தினர் நேற்று மன்றில் முன்னிலையாகாததால் வழக்கை இன்றுவரை மன்று ஒத்திவைத்தது. அத்துடன், தொல்பொருள் திணைக்களக்க அதிகாரி, முல்லைத்தீவு தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகிய இருவரையும் நாளை நீதிமன்றில் முற்படுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம26)

## தவறான...

இவர்களில் 240 பேர் ஆண்கள். 112 பேர் பெண்கள். நல்லூர் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளிலேயே அதிகளவானோர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துள்ளனர்.

2016ஆம் ஆண்டு 62 பேர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளனர். 2017ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 6 பேரால் அதிகரித்து 68 ஆகியுள்ளது. 2018ஆம் ஆண்டு 26 பேரால் அதிகரித்து 94 ஆகியுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு 34 பேரால் அதிகரித்து 128 ஆகியுள்ளது.

2019ஆம் ஆண்டு குடும்பப் பிரச்சினைகளால் 70 பேரும், நோய் காரணமாக 12 பேரும், மனப் பாதிப்புக் காரணமாக 32 பேரும், போதைப் பாவனைக்கு அடிமையாகியமை காரணமாக 2 பேரும், கல்வி அழுத்தம் காரணமாக 3 பேரும், நுண்நிதிக் கடன் காரணமாக 2 பேரும், அங்கவீனம் காரணமாக 6 பேரும், வறுமை காரணமாக ஒருவரும் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளனர். இவர்களில் 10 பேர் 20 வயதிலும் குறைந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-ஒ,5)

## தியாகி...

எதிர்வரும் 16ஆம் திகதி வவுனியா பொங்குதமிழ் தூபிக்கு முன்பாக இருந்து நல்லூர் வரையில் பேரணியொன்றினை நடத்துவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. இந்த நிலையில் வவுனியா நகரசபை உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும் குறித்த நிகழ்வின் ஏற்பாட்டாளருமான ஜானுயன் பொலிஸில் அனுமதிபெற முற்பட்ட நிலையில் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி உறுப்பினர் இது தொடர்பில் வவுனியா மனித உரிமைகள் சபையில் வழக்குத் தொடரவுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ம-110)

## வவுனியாவில்...

கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இளைஞர்கள் மூவர் படுகாயமடைந்தனர்.

வவுனியா மன்னார் பிரதான வீதியில் நெளுக்குளம் பகுதியிலிருந்து பூவரசங்குளம் பகுதி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் கற்பகபுரம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த காருடன் நேருக்குநேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். செக்கடிப்புலவை சேர்ந்த கரிகரன் (வயது 21), மதுசன் (வயது 20), சர்மிலன் ஆகியோரே காயமடைந்தனர். விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-18,110)

## இந்திய மீன்...

பான விவாத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. சாள்ஸ் நிர்மலநாதன் வடக்கின் மீனவர் பிரச்சினை குறித்துப் பேசினார். அந்த உரையில் அவர், 'வடக்கு கடல் எல்லையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' எனக் கூறியபோதே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, 'நீங்கள்தானே இந்தியாவிடம் சென்று எல்லாம் கேட்கிறீர்கள். இதையும் சொல்லுங்கள்' என்றார். இதன்போது சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி., 'நீங்கள் எமது மக்களுக்குத் தர வேண்டியதைத் தராது போனால் நாம் அவர்களிடம்தானே கேட்க வேண்டும்' என்றார்.

இதற்கு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, 'எங்களுக்கு அதிகாரங்களைத் தாருங்கள் என இந்தியாவிடம் சென்று கேட்கின்றீர்கள். மறுபக்கம் எம்மிடம் வந்து இந்தியாவைக் கட்டுப்படுத்துங்கள் எனக் கூறுகின்றீர்கள். எனவே, மீனவர் பிரச்சினை தொடர்பில் நீங்கள் இந்தியாவிடம் கூற வேண்டியதுதானே' என்றார். உடனே பதிலளித்த சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி, 'இந்த இரண்டு பிரச்சினைகளும் வேறுபட்டவை. அதனை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்' என்றார். (ம-22)

## விக்கியை..

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் சிங்கள அரசுக்கு எச்சரிக்கை விடுத்து ஆற்றிய உரையும், அதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பதிலளித்து ஆற்றிய மிரட்டல் உரையும் தமிழ் சிங்களவர்களுக்கிடையில் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தன. இது தொடர்பில் நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து சரத் பொன்சேகா எம்.பியிடம் நேற்று ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'விக்னேஸ்வரன் கொலைசெய்யப்படுவார் என்று நான் மிரட்டவில்லை. கடந்த காலத்தில் சிங்களவர்களைக் குறைத்து மதிப்பிட்டவர்கள்சுட்டுக்கொல்லப்பட்டமை உண்மை. அதை விக்னேஸ்வரன் நினைவில் வைத்துக்கொண்டு கருத்து வெளியிட வேண்டும் என்றே கூறியிருந்தேன். அதாவது அவரின் உயிரைப் பாதுகாக்கும் வகையிலேயே அந்த எச்சரிக்கையை விடுத்திருந்தேன். விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய சர்ச்சைக்குரிய உரை தொடர்பில் அவருக்கே நான் பதிலுரை வழங்கியிருந்தேன். எனது பதிலுரை எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல. 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றியடையாவிட்டாலும் தமிழ் மக்கள் எனக்கு வழங்கிய அமோக ஆதரவை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். எனது உரை தொடர்பில் விக்னேஸ்வரன் அச்சம் அடையத் தேவையில்லை. அவர் எச்சரிக்கையாக இருந்தால் மட்டும் சரி. அவரின் உரை ராஜபக்ச அரசின் அரசியலுக்குத்தான் சாதகமாகப் போகின்றது. எனவே, அவர் இனிமேல் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் என்றார். (ம-22)

## தரம் குறைந்த வீதிப் புனரமைப்பு

### மக்கள் விசனம்

மானிப்பாய், செப்.10

உரிய மூலப் பொருள்களைப் பயன்படுத்தாமல் இடம்பெறும் வீதி அபிவிருத்தி வேலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள மக்கள், அது தொடர்பில் பிரதேச சபை தவிசாளருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் 11ஆம் வட்டாரத்தில் அரசடிச் சந்தியிலிருந்து பிப்பிலிச் சந்தி வரை செல்லும் சுமார் 2 கி.மீ நீளமான புலவர் வீதி பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படவில்லை.

பொதுமக்கள் மட்டுமல்ல, பிப்பிலி மயானத்துக்குச் செல்லும் மக்களும் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர். வீதி அபிவிருத்தித்திணைக்களத்துக்குச் சொந்தமான வீதி தொடர்பில், பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். திணைக்களத்தால் வீதி வேலைகள் கடந்த வாரத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் உரிய மூலப் பொருள்களைப் பயன்படுத்தாமலும் வேலைகள்முன்னெடுக்கப்படுகின்றன. இது தொடர்பில், தவிசாளருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (க-115)

## இந்திய இழுவை..

வித்தார்.

கடந்த முப்பது வருடங்களாக இந்திய இழுவைப் படகுகள் மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து தங்கள் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் அழித்து வருவதைக் கண்டித்து நேற்று புதன்கிழமை பேசாலை மீனவ சமூகம் போராட்டத்தில் ஈடுபட்டது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மன்னார் ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மீனவர்களின் பொருளாதாரம் இந்திய இழுவைப் படகுகளால் சீரழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இதற்கு இலங்கை அரசு சிறந்த தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இந்திய இழுவைப் படகுகளால் கடற்றொழில் செய்யும் குடும்பங்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றன. இது தொடர்பில் ஜனாதிபதி வரை சென்று முறையிட்டுள்ளோம். உரிய அதிகாரிகள் இது தொடர்பில் உயர்மட்ட ஆலாசனையை நடத்தி உரிய தீர்வைத் தரவேண்டும் என்றார். (ம-60)

# இலக்கிலிருந்து தப்பிய சலே அருகில் இருந்த 10 பேர் சாவு





காபூல், செப்.10

**ஆப்கானிஸ்தான் துணை ஜனாதிபதி அம்ருல்லா சலேவை இலக்கு வைத்து காபூலில் நேற்றுக் காலை குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத் தாக்குதலில் குறைந்தது 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பல பாதுகாப்பு வீரர்கள் காயமடைந்துள்ளனர்.**

தாக்குதலையடுத்து பேஸ்புக்கில் வெளியான காணொலியில், சலேயின் இடது கையில் கட்டுப்போடப்பட்டுள்ளது. தாக்குதலின் பின்னர் கருத்து தெரிவித்துள்ள சலே, தான் நன்றாக இருக்கின்றேன் எனவும், தன்னுடன் காரில் பயணித்த தனது மகனும் நன்றாக உள்ளார் எனவும்தெரிவித்துள்ளார். எனினும் தனது காவலர்கள் சிலர் காயமடைந்துள்ளனர் எனவும் தன்னுடைய முகத்திலும் கைகளிலும் சில தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் அந் நாட்டு உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் தாரிக் அரியன், குறைந்தது இரண்டு பொதுமக்கள் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவித்தார். எனினும் பின்னர் இறந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்வடைந்துள்ளதுடன் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 15 ஆக அதிகரித்துள்ளது என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தின் கீழ் ஆப்கானில் தாக்குதல்களை நடத்த மாட்டோம் என்று உறுதியளித்துள்ள தலிபான்கள் இத் தாக்குதலுக்கு பொறுப்பேற்க மறுத்துள்ளனர். (வ-இ)



## பெலருஸ் எதிர்க்கட்சித் தலைவி கொலேஸ் நிகாவ் கைது

மின்ஸ்க், செப்.10

பெலரஸ் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்த எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொலேஸ் நிகாவ் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

பெலருஸ்ஸில் கடந்த ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் 6ஆவது முறையாக அலெக்சாண்டர் லுகாஷென்கோ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும் அலெக்சாண்டர் மோசடி செய்தே தேர்தலில் வெற்றி பெற்றார் என அவருக்கெதிராக அந் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரான மரியா கொலேஸ்நிகாவ் மாபெரும் போராட்டங்களை நடத்தியிருந்தார். இந்நிலையில் அவர் கடந்த திங்கட்கிழமை பெலருஸின் தலைநகரான மின்ஸ்க்கில் வைத்து மாயமானார் என அந் நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனையடுத்து அவரும் அவரது நண்பர்களும் உக்ரைனுக்குக் காரில் தப்பிச் செல்ல முற்பட்டபோது உக்ரைன் எல்லையில் நேற்றுத் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (வ-இ)


## சுரங்கம் இடிந்து விழுந்ததில் 22 தொழிலாளர்கள் சாவு

இஸ்லாமாபாத், செப். 10

பாகிஸ்தானின் சலவைக்கல் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். 12க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பெஷாவருக்கு 85 கிமீ தொலைவில் உள்ள இந்தச் சுரங்கத்தின் 6 பிரிவுகள் திங்கள் இரவு இடிந்து விழுந்தன. இதில் 12 சுரங்கத் தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே நசுங்கி உயிரிழந்தனர்.

காயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் 10 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது.

இன்னும் பலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர் எனத் தெரியவருகிறது. சுரங்கம் இடிந்து விழுந்த போது 45 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர் என பாகிஸ்தான் ஊடகம் தெரிவித்துள்ளது. (வ-இ)



## இந்தியாவில் 44 லட்சத்தை நெருங்குகிறது கொரோனாப் பாதிப்பு

புதுடில்லி, செப். 10

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் ஏறக்குறைய 90 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து ஒட்டுமொத்தப் பாதிப்பு 43 லட்சத்தைக் கடந்து 44 லட்சத்தை நெருங்கியுள்ளது என்று இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 89 ஆயிரத்து 706 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் ஒட்டுமொத்த தொற்று எண்ணிக்கை 43 லட்சத்து 70 ஆயிரத்து 128 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி 20 லட்சத்தையும், 20ஆம் திகதி 30 லட்சத்தையும், கடந்த 5ஆம் திகதி 40 லட்சத்தையும் எட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் கொரோனாவால் 1,115 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் ஒட்டுமொத்த உயிரிழப்பு 73 ஆயிரத்து 890 ஆக அதிகரித்துள்ளது. (வ-இ)



## வாரத்தில் 3 நாள்கள் விடுமுறை

கூகுள் நிறுவனம் தனது பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு வாரத்துக்கு 3 நாள் விடுமுறை அளிக்க முடிவு செய்துள்ளது.

இரண்டு நாள் விடுமுறையுடன் கூடுதல் ஒரு நாள் விடுமுறை அளிப்பது ஊழியர்களின் மன உளைச்சலைக் குறைப்பதோடு அவர்கள் சிறப்பாக செயல்பட உதவும் என கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது. புதிதாக பணிக்குச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இந்தச் சலுகையை கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. (வ)

### மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 07 . 1972



இறப்பு 09 . 09 . 2020

**திருமதி கிமாலினி சத்தியசீலன்**

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிமாலினி சத்தியசீலன் நேற்று (09.09.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் தெய்வநாயகி தம்பதியினரின் அன்பு மகளும், சத்தியசீலனின் அன்பு மனைவியும், ஆதித்தனின் பாசமிகு தாயாரும், நளாயினி (ஜேர்மனி), ஸ்ரீராமகிருஷ்ணன் பவானி ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் இடம்பெறும். விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.

# நெதர்லாந்தை வீழ்த்தியது இத்தாலி



லண்டன், செப். 10

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில், நெதர்லாந்து, இத்தாலிக்கிடையேயான குழு 'ஏ' போட்டியொன்றில் 1:0 என்ற கோல் கணக்கில் இத்தாலி வென்றது. இத்தாலி சார்பாகப் பெறப்பட்ட கோலை நிக்கொலா பரெல்லா பெற்றுக் கொடுத்தார்.

பொஸ்னியா அன்ட் ஹெர்ஸேகோவினாவில் நடைபெற்ற போலந்து, பொஸ்னியா அன்ட் ஹெர்ஸேகோவினாக்கிடையேயான இன்னொரு குழு 'ஏ' போட்டியொன்றில் 2:1 என்ற கோல் கணக்கில் போலந்து வென்றது. போலந்து சார்பாக, கமில் கிலிச், கமில் குறொசிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பொஸ்னியா அன்ட் ஹெர்ஸேகோவினா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹரிஸ் ஹரஜ்ராடினோவிச் பெற்றார்.

வட அயர்லாந்தில் நடைபெற்ற வட அயர்லாந்துக்கும், நோர்வேக்குமிடையிலான போட்டியில் 1:5 என்ற கோல் கணக்கில் வடஅயர்லாந்து தோல்வியைத் தழுவியது. நோர்வே சார்பாக, எர்லிங் பிறோட் ஹலான்ட், அலெக்ஸான்டர் சொர்லொத் ஆகியோர் தலா இரண்டு கோல்களையும், மொஹமட் எலியூனோஸ்ஸி ஒரு கோலையும் பெற்றனர். வட அயர்லாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை படி மக்நைர் பெற்றார். (எ)



# விலகினார் ஆஷ்லி

சிட்னி, செப்.10

உலகின் முதல்நிலை ரென்னிஸ் வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

கொரோனா தொற்று அச்சம் காரணமாகவே ஆஷ்லி பார்ட்டி இந்தத் தொடரில் இருந்து விலகியுள்ளார். எதிர்வரும் 27ஆம் திகதி பரிஸ் நகரில் 'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 24 வயதான ஆஷ்லி கடந்த ஆண்டு ரோலண்ட் கரோஸில் நடந்த தொடரில் மார்க்கெட்டா வொண்ட்ரூசோவாவை தோற்கடித்து கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றிருந்தார். (எ)



# வருத்தம் இல்லை

## மனம் திறந்தார் புஜாரா

புதுடில்லி, செப்.10

ஐ.பி.எல். ஏலம் எடுக்கும் முறை மீது எனக்கு வருத்தம் கிடையாது. எனக்கு எந்தக் கௌரவப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்துள்ளார் இந்திய அணி வீரர் புஜாரா.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முக்கிய வீரர் 32 வயதான புஜாரா. இவர் ஒரு நாள் மற்றும் ரி20 ஆட்டங்களில் ஓரங்கட்டப்பட்டு வருகின்றார். இம்முறை ஐ.பி.எல். ஏலத்திலும் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐ.பி.எல். ஏலம், வியூகங்களும், தந்திரமும் நிறைந்தது என்பதை அறிவேன். உலகத் தரம் வாய்ந்த வீரரான அம்லா கூட விலை போகவில்லை. ரி20 ஆட்டங்களின் சிறந்த பல வீரர்களும் விடுபட்டு உள்ளனர். அதனால் என்னை தேர்ந்தெடுக்காமைக்காக ஐ.பி.எல். ஏலம் எடுக்கும் முறை மீது எனக்கு வருத்தமோ, கௌரவப் பிரச்சினையோ இருந்ததில்லை. 'புஜாரா ஒரு டெஸ்ட் வீரர்' என்று ரசிகர்கள் முத்திரை குத்தி விட்டனர்.

வாய்ப்பு அளிக்கப்பட்டால் வெள்ளை நிறப் பந்து கிரிக்கெட்டிலும் எனது திறமையை நிரூபித்து காட்ட முடியும். உள்ளூர் ஒரு நாள் போட்டிகளில் சிறப்பாக (சராசரி 54) விளையாடி உள்ளேன். முஷ்டாக் அலி ரி20 தொடரில் சதம் அடித்திருக்கிறேன். மூன்று வடிவிலான கிரிக்கெட்டிலும் விளையாடினால் மிகவும் மகிழ்ச்சி அடைவேன் -என்றார். (எ)

# கொரோனா பிடியில் கிலியன் எம்பாப்வே



பரிஸ், செப்.10

பிரான்ஸ் தேசிய மற்றும் பரிஸ் செயின்ட் ஜெர்மைன் கால்பந்து கழக அணியின் இளம் முன்கள வீரரான கிலியன் எம்பாப்வேவிற்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனால் அவர் நேற்றுமுன்தினம் நடந்த நேஷன்ஸ் லீக் கால்பந்து தொடரின் குரேஷியா அணிக்கெதிரான போட்டியைத் தவறவிட்டார்.

அணி வீரர்களிடமிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ள கிலியன் எம்பாப்வே, தற்போது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

சனிக்கிழமை நடைபெற்ற நேஷன்ஸ் லீக் தொடக்க சுவீடன் அணிக்கெதிரான போட்டியில், 21 வயதான கிலியன் எம்பாப்வே கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்திருந்தார். (எ)


## கணக்காளர் தேவை

**A.M.T எரிபொருள் நிரப்பு நிலையம்**

**யாழ்ப்பாணத்துக்கு** கணக்காளர் ஒருவர் தேவைப்படுகின்றார். வயதெல்லை 25 தொடக்கம் 45 வயதுக்கிடைப்பட்டோர் விரும்பத்தக்கது. கணக்கீட்டு அலகு Quick Book தொடர்பான முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

077 739 1221, 077 312 7550

E.Mail - vathanu.kokul@yahoo.com


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 . 10 . 1943 |  | 09 . 09 . 2020 |

### திருமதி தம்பிராசா இலட்சுமி

பொன்னாலை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தம்பிராசா-இலட்சுமி நேற்று (09.09.2020) புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி -சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், சுரேஷ்குமாரின் (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) பாசமிகு தாயாரும், சிவரதினியின் (யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை) மாமியாரும், பபிஷ்யா, நிலக்ஸன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கணேஸ் மற்றும் சிவபாதம், சற்குணம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2020) வியாழக்கிழமை மு.ப 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**100/4, பொன்னாலை வீதி, சங்கானை.**

**தகவல்: குடும்பத்தினர்**
077 903 7529



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.